வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 23.05.2022 திங்கட்கிழமை | இதழ் : 168 | பக்கங்கள் : 16




## தமிழ்நாட்டின் உதவி பொருட்களுடன் கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது




கொழும்பு, மே 23

தமிழ்நாட்டு மக்கள் இலங்கைக்கு அளித்த நிவாரணப் பொருட்களில் முதல் கட்ட பொருட்களுடனான கப்பல் நேற்று இலங்கையை வந்தடைந்தது.

200 கோடி இலங்கை ரூபாய் மதிப்பிலான இந்த நிவாரணப் பொருட்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே

15

## யாழ்ப்பாணத்து பெண் ஆஸி. யில் எம். பியானார்!



சிட்னி, மே 23

அவுஸ்திரேலிய வரலாற்றில் முதன் முறையாக இலங்கை தமிழ் பூர்வீகத்தை கொண்ட - யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரான மிஷேல் ஆனந்தராஜா பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நேற்றுமுன்தினம் நடந்த தேர்த

15

## இலங்கைக்கு உதவுவதற்காக சர்வதேச வங்கிகள் இணைவு

### கூட்டிணைந்து செயல்பட தீர்மானம்

கொழும்பு, மே 23

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் நோக்கில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு வங்கி ஆகியன இணைந்து கூட்டிணைந்த செயல் திட்டம் ஒன்றின் கீழ் இயங்கத் தீர்மானித்துள்ளன.

சர்வதேச நிதி வழங்கல் கட்டமைப்புகளான இந்த மூன்று வங்கிகளும்

15

## 24 மணி நேர சுகாதார சேவைகள் ஸ்தம்பிக்கும் நிலை!

கொழும்பு, மே 23

**நாட்டில் நிலவும் நெருக்கடி சூழ்நிலையால் 24 மணி நேர சுகாதார சேவையை முன்னெடுப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு எட்டப்படாது விடின் சுகாதார சேவை தன்னிச்சையாக இடைநிறுத்தப்பட வாய்ப்புள்ளது - என்று சுகாதார தொழில்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

சுகாதார துறையில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு தீர்வாக பரிந்துரைகளை தொழில்சங்கங்கள் முன்வைத்துள்ளன.

இந்நிலையில், கடமைக்கு போதிய பணியாளர்கள் இல்லாமை, தனியார் வாகனங்களில் பணிக்கு வரும் ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்க இயலாமை, சொந்த சம்பளத்துடன் ஒப்பிடும் போது போக்குவரத்து செலவுகளை ஏற்க இயலாமை ஆகியவை

15

## எழுத்தாளர் தெணியான் காலமானார்!

வடமராட்சி, மே 23

ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளரும் சாஹித்திய மண்டல விருது பெற்றவருமான "தெணியான்" என்று அறியப்பட்ட கந்தையா நடேசன் (வயது 80) நேற்று காலமானார்.

அண்மைக்காலமாக நோய்களுக்கு உள்ளாகியிருந்த

15

## இலங்கையின் இன்றைய நிலை ஏனைய நாடுகளுக்கும் நேரலாம்!

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

நியூயோர்க், மே 23

அரசாங்கங்கள் வறிய மக்களுக்கு உதவ முன்வராவிட்டால் இலங்கையின் நிலை உலகின் ஏனைய நாடுகளில் உருவாகலாம் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் எச்சரித்துள்ளார்.

உணவு எரிபொருட்களின் விலைகளை மானிய அளவில் சமூகத்தின் வறிய மக்களுக்கு அரசாங்கங்கள் வழங்க வேண்டும், அரசாங்கங்களின் உரிய ஆதரவு இல்லாவிட்டால் இலங்கையின் நிலை ஏனைய நாடுகளில் உருவாகலாம் என கிறிஸ்ரலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் வாழ்க்கை செலவு அதிகரிப்

15

## மர்மப்பொருள் வெடித்ததில் கிளாலியில் சிறுமி படுகாயம்!

கிளிநொச்சி, மே 23

தாயருடன் இணைந்து காணியை துப்புரவு செய்து கொண்டிருந்த போது மர்மப் பொருள் வெடித்ததில் சிறுமி ஒருவர் கால் ஒன்றை பாதத்துடன் இழந்துள்ளார்.

இவ்வாறு படுகாயமடைந்த சிறுமி இன்றைய தினம் ஆரம்பமாகும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு

15

## 2024ஆம் ஆண்டுவரை தேர்தல் எதுவுமில்லை!

கொழும்பு, மே 23

இலங்கையில் 2024ஆம் ஆண்டு வரை எந்தவொரு தேர்தலையும் நடத்தாமல் இருக்க கோட்டாபய - ரணில் தலைமையிலான அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என அறிய வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட விடயங்களை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

15

## சாகோஸ் தீவில் இலங்கை அகதிகள் உண்ணாவிரதம்

லண்டன், மே 23

பிரிட்டனுக்கு சொந்தமான சாகோஸ் தீவில் உள்ள இராணுவதளத்தில் கடந்த ஏழு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள் தங்கள் நிலைமையை வெளிப்படுத்துவதற்காக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சாகோஸ் தீவில் கடந்த ஏழு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 89 இலங்கை தமிழ் அகதிகளில் 42 பேர் உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபரில் தமிழ்நாட்டிலிருந்து கனடா நோக்கி 89 இலங்கை தமிழ் அகதிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த படகு நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தவேளை பிரிட்டன் இராணுவம் அந்தப் படகை மீட்டு டியேகோ கார்சியாவிற்கு கொண்டு சென்றிருந்தனர்.

அமெரிக்க படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள டியாகோ கார்சியா இராணுவதளத்திற்கு இவர்கள் கொண்டுசெல்லப்பட்டுள்ளது முதல் வெளி உலகத்துடனான அவர்களின் தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன - முதல் ஆறு வாரங்கள்

15

## நெருக்கடிகளுக்கு மத்தியில் ஓ.எல். பரீட்சை இன்று ஆரம்பம்!

கொழும்பு, மே 23

பொருளாதார நெருக்கடியால் நாட்டில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

இந்நிலையில், மாணவர்களை இரு மணி நேரங்களுக்கு முன்னரே பரீட்சை மண்டபங்களுக்கு அனுப்பி வைக்குமாறு பெற்றோர்களை பரீட்சை திணைக்களம் கோரியுள்ளது. இதன்

15

## பாதுகாப்பு அமைச்சு பதவியை துறக்க தயாராகிறார் ஜனாதிபதி!

கொழும்பு, மே 23

பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ துறக்க விரும்புகிறார். பாதுகாப்பு விவகாரங்களை கையாண்டதில் சுமார் 15 வருடங்கள் அனுபவமுடைய அவர் அந்தப் பதவியை வேறு ஒருவருக்கு வழங்க முன்வந்துள்ளார்.

இந்த விடயத்தை கடந்த வியாழக்கிழமை நடந்த அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி பிரதமருக்கு தெரியப்படுத்தினார் என்று கூறப்

15

# தமிழ் எம்.பிக்களின் வீடுகளை முற்றுகையிட்டு போராடுவோம்!

## வடமராட்சி மீனவர்கள் எச்சரிக்கை

வடமராட்சி, மே 23

**எமக்கு எரிபொருள் கிடைக்கவில்லை. இதனால், வாழ்வாதாரத்துக்காக நாம் சிரமங்களை எதிர்நோக்குகிறோம். இது தொடர்பில் அரசும் தமிழ் எம்.பிக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல், அவர்களின் வீடுகளை முற்றுகையிட்டு போராட நேரிடும் என்று வடமராட்சி மீனவர்கள் எச்சரித்துள்ளர்.**

அத்துடன், ரணில் ஒரு குள்ளநரியன். அவர் பிரதமராக வந்ததன் பின்னரே வந்த எரிபொருளும் வராமல் போனது என்று குற்றஞ்சாட்டியுள்ளனர்

நேற்று மீனவர்கள் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்படி விடயங்களை தெரிவித்தனர்.

மேலும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எங்களுக்கு கடந்த மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னர் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறவில்லை. இதனால், நாம் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் வாழ்வாதாரத்துக்காக பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவித்தனர்.

எமக்கு, நாளாந்தம் குறைந்த பட்சம் 40 லீற்றர் எரிபொருள் தேவை. ஆனால், கடந்த காலங்களில் வாரத்துக்கே 40 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது. அதுவும் கடந்த மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னர் விநியோகிக்கப்படவில்லை. இதனால், எமது படகு மற்றும் உபகரணங்களை கரையில் ஏற்றி வைத்துவிட்டு உறங்க வேண்டியுள்ளது. வாழ்வாதாரத்துக்கு நாளாந்தம் மிகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறோம்.

இதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் தமது தமிழ் அரசியல்வாதிகளும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் அவர்களின் இல்லங்களை முற்றுகையிட்டு கோட்டா கோ கம போன்று செயல்படவேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தனர். (ஐ-2)

# ஆரியகுளத்தை முன்வைத்து அரசியல் நடத்தவேண்டாம்!

## யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 23

ஆரிய குளத்தை வைத்து குறுகிய அரசியலை நடத்த வேண்டாம் என யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார், மேலும், “ஆரியகுளம் தற்சமயம் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எதிர்வரும் காலத்தில் மிகச் சிறப்பாகவும் தூய்மையாகவும் அதனைப் பேண வேண்டுமென அவரிடம் கூறியிருக்கின்றோம்.

“அதேபோன்று மாநகர சபையின் அனுமதியுடன் ஆரிய குளத்தில் படகு சேவைக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. நாங்கள் பல நிபந்தனைகளை அவர்களுக்கு விதித்திருக்கின்றோம். படகு சேவைக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதிகள் செய்யப்படவேண்டும். நீச்சல் பயிற்சி பெற்ற இரண்டு ஊழியர்கள் தொடர்ச்சியாக கடமையாற்ற வேண்டும். பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு இணங்கவே அனுமதி வழங்கப்பட்டது.

“மேலும், ஆரியகுளத்தை மாநகர சபையிடமிருந்து பறிக்கவெடுக்கும் முயற்சி என்பது யாழ்ப்பாணத்தில் அமைதியின்மையை உருவாக்கி, மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயமாகும். பொறுப்பில் இருக்கின்றவர்கள் ஆரிய குளத்தில் அரசியல் செய்வதை நாம் விரும்பவில்லை. அது ஒரு சாதாரண பொழுதுபோக்கு மையம். மக்களுக்காக கட்டப்பட்ட விடயத்தை மக்களிடம் விட்டுவிடுங்கள். அதை வைத்து குறுகிய அரசியலை நடத்த வேண்டாம்” என்றார். (ஐ)

# அருளாசி உரையும் வேதபாராயணமும்!

யாழ்ப்பாணம், மே 23

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு புங்குடுதீவு இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக் குருக்களின் உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

# மே 9 வன்முறைகள்; 1500 பேர்வரை கைது!

கொழும்பு, மே 23

மே 9ஆம் திகதி காலிமுகத்திடலில் வன்முறையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று மதியம்வரை 1500 பேரை பொலிஸார் நாடளாவிய ரீதியில் கைது செய்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பதிவான 844 சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்தநிலையில், அவை தொடர்பில் இவர்களைக் கைது செய்ததாகப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந் நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்ட 1500 பேரில் நேற்று வரை 677 பேர் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். நேற்று மதியம் வரையான 24 மணி நேரத்தில் கைதான 152 பேரில் 101 பேர் பிணை யில் விடுவிக்கப்பட்டனர். 39 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் விரைவில் நீதிமன்றங்களில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப் பிட்டார். (ஐ)

# தென்மராட்சியில் குண்டுகள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 23

தென்மராட்சியில் காணி துப்புரவு செய்தபோது கைவிடப்பட்ட நிலையில் ஏராளமான குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கெற்பேலி பகுதியிலேயே காணி ஒன்றில் இந்த குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை, இராணு நடவடிக்கையின் போது கைவிடப்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இதனையடுத்து காணி உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குண்டுகளை மீட்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவரின் மனைவிக்கு ஒரு பக்கத்து காது திடீரென்று கேட்கும் சக்தியை இழந்துவிட்டிருந்தது. அவர் கொழும்பில் பிரபல வைத்தியர் ஒருவரிடம்சென்று மருத்துவ ஆலோசனை பெற்றார்.

பல்வேறு பரிசோதனைகளின் பின்னர், அவருக்கு மூளையில் சிறிய கட்டி ஒன்று வளர்ந்துகொண்டிருப்பது தெரியவந்தது. நண்பர் வீட்டில் மரணவீடொன்றில் இருப்பதுபோன்ற சோகம். ஒவ்வொருவரும் தத்தமது விருப்பத்துக்குரிய கடவுளிடம் வேண்டுதலை வைக்கத் தொடங்கினர்.

இதற்கிடையே ஒரு போதகர் அவரின் தலையில் கை வைத்து ஜெபித்துவிட்டு, இப்போது ‘ஸ்கான்’ எடுத்துப் பாருங்கள், கட்டி இல்லாமல் போயிருக்கும் என்று சொன்ன கதையைக் கேட்டு, மீண்டும் சில ஆயிரம் செலவு செய்து ஸ்கான் எடுத்தது வேறு கதை.

கடைசியில், பிரபல டாக்டர் ஒருவரிடம் சென்று அவர் மூலம் சத்திர சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார் நண்பர். தான் நோயாளியுடன் முதலில் கதைக்கவேண்டும் என்று டாக்டர் நிபந்தனை விதித்துவிட்டார். அவர் அந்த சத்திர சிகிச்சையின் நீள அகலங்களை நோயாளியிடம் சொன்னால், அவர் பயத்திலேயே மூச்சை விட்டுவிடுவார் என்ற பயம் நண்பருக்கு. வேறு வழியின்றி, டாக்டரிம் நோயாளி அழைத்துச் செல்லப்பட்டார்.

டாக்டர் நீண்ட வகுப்பெடுக்க தொடங்கிவிட்டார். ஓர் உடம்பில் மூளை எவ்வளவு முக்கியமானது என்பதிலிருந்து, அதுவே நமது உடம்பு செய்கின்ற அத்தனை வேலைகளையும் இயக்கிக்கொண்டிருக்கின்றது. உதாரணமாக, எமது முகத்தை திருப்புகின்றபோதும் அதற்கான ஆணையை மூளையே வழங்குகின்றது. அந்த ஆணையை வழங்குகின்ற பகுதியில்தான் உமக்கு கட்டி இருப்பதால், அதனை வெட்டுகின்றபோது முகத்தை திருப்புகின்ற ஆணையை வழங்குவதை அது பாதிக்கச் செய்யலாம். அப்படி பாதிப்பு வந்தால் உமது முகம் எப்படி இருக்கும் என்பதற்கு, முன்னதாக இதுபோன்ற நோயாளிக்கு சத்திர சிகிச்சை செய்தபோது ஏற்பட்ட மாற்றத்தை குறிக்கும் புகைப் படம் இது என்று கூறி, புகைப்படம் ஒன்றையும் காட்டினார் டாக்டர்.

இப்போது நண்பரின் மனைவியின் கண்கள் குளமாகின. அவர் நிமிர்ந்து கணவரைப் பார்த்தார். அவரும் நிலைமையை அறிந்து தலையைக் குனிந்துகொண்டார். இப்படியே, அந்த சத்திரசிகிச்சை செய்தால் என்ன எல்லாம் நிகழலாம் என்று டாக்டர் நினைக்கின்றாரோ, அதனையெல்லாம் அவருக்கு பட்டியிலிட்டுக்கொண்டிருந்தார்.

டாக்டரைப் பொறுத்தவரை அவை எல்லாம் நடக்காமலும் சத்திரசிகிச்சையை முடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை இருந்தாலும், அவரையும் மீறி அவை நடந்துவிட்டாலும், முன்கூட்டியே சொல்லிவிடவேண்டும் என்பது அவரது கடமை.

எதற்காக இந்த நீண்ட விளக்கம், அவை எல்லாம் எதற்கு என்று நீங்கள் முணுமுணுப்பது தெரிகின்றது. இந்தப் பத்தியில் எதற்காக இவர் தனது நண்பரின் கதையைச் சொல்கிறார் என்று நீங்கள் கருதலாம். அது விசயத்துடன் தான்.

அந்த டாக்டரின் வேலையைத் தான் நமது புதிய பிரதமர் இப்போது செய்துகொண்டிருக்கின்றார். நாடு இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் பாரிய நெருக்கடியைச் சந்திக்கும். ஓகஸ்டில் உணவுக்கும் மிகப்பெரிய தட்டுபாடு ஏற்படும் என்று அவர் அபாயச் சங்கு ஊதுவது ஏன் என்பது உங்களுக்கு புரிந்திருக்கும். நாடு பொருளாதார நெருக்கடியில் கால்வைக்கத் தொடங்கியபோதே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியவர் இன்றைய பிரதமர். அப்போதெல்லாம் அதனை நிராகரித்து வந்த ராஜபக்ஷ அரசு, கடைசியாக அங்கு சென்றபோது, தாமதமாக போனாலும் இப்போதாவது போயிருக்கிறார்கள் என்று ரணில் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். நமது நிதியமைச்சர் அமெரிக்கா சென்று பேச்சு நடாத்தத் தொடங்கி மூன்று வாரங்கள்கூட ஆகியிருக்காது, நாணயநிதியத்திற்கு விருப்பமான ஒருவர் பிரதமராகவே ஆகியிருந்தார். சர்வதேச நாணய நிதியத்திடம் போய் நமது நாடு காலில் விழுந்ததும், இனி எங்கள் பிரச்னைகள் எல்லாலம் தீர்ந்துவிட்டதுபோல துள்ளிக்குதிக்கின்றோம். ஆனால் அப்படி போன பின்னரும் அடுத்த சில மாதங்களில் நாடு இன்னமும் பாரிய நெருக்கடியைச் சந்திக்கவிருக்கின்றது என்று பிரதமர் எச்சரிக்கை விடுப்பது ஏன் என்பது புரியாமல், பலரும் புருவங்களை உயர்த்தி கொண்டிருக்கின்றனர்.

இனி, சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும்போது, நாட்டில் இலவச கல்வியும், ஏன் இலவச மருத்துவமும்கூட காணாமல்போகலாம். அல்லது, அதிலும் கைவைக்கப்படலாம். அளவுக்கதிகமான அரச பணியாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்படலாம். இதற்கு முன்னோட்டமாகவே, அவசியமற்ற பணியாளர்கள் வேலைக்கு வரவேண்டாம் என்று, இப்போதே ‘நீங்கள் தேவையில்லாதவர்கள்’ தானே என்று அவர்களைக் கொண்டே கூறவைக்கப்படுகின்றது. ரணில் இப்போது ஊதத் தொடங்கியிருப்பது அபாயச் சங்குதான். அதனைக் கண்டு நாம் பொங்கி எழுந்துவிடவோ, அல்லது கவலைப்படவோ கூடாது என்பதற்காகவே, அந்த நோயாளிக்கு முன்கூட்டியே டாக்டர் சொன்னதுபோல, ரணில் நமக்கு சொல்லத் தொடங்கியிருக்கிறார்.

**- ஊர்க்குருவி**

Eelanadu ஈழநாடு
23.05.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், வைகாசி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# உதாரணமாக மாறியிருக்கும் இலங்கை?

வரலாறு எத்தனை ஆச்சரியங்களை ஒளித்து வைத்திருக்கின்றது? இந்தக் கேள்விக்கான பதிலை எவரும் அறியார். சில மாதங்கள் வரையில், உலகில் பயங்கரவாதத்தை தோற்கடித்ததில் இலங்கை ஒரு முன்மாதிரியான நாடென்னும் பிரசாரத்தை - ராஜபக்ஷக்களும், அவர்களுக்கு ஆதரவான சிங்கள கருத்தியலாளர்களும் செய்து கொண்டிருந்தனர். வெல்லவே முடியாதென்று கருதப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, தாம் வென்றதான ஒரு கதையை திரும்பத், திரும்பக் கூறிக் கொண்டிருந்தனர். இப்போது நிலைமைகள் தலை கீழாகியிருக்கின்றன. இந்தளவு விரைவாக நிலைமைகள் மாறும் என்பதை ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல - நம்மில் எவருமே நினைத்திருக்கவில்லை.

சமுதாயத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளவர்களுக்கு, அரசாங்கம், உணவு, எரிபொருள் மற்றும் போதிய வசதிகளை செய்யாதுவிட்டால், இலங்கையில் இடம்பெற்றது போன்ற, வண்முறைகள், ஏனைய நாடுகளிலும் இடம்பெறுமென்று, சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர், கிறிஸ்ரலினா ஜோர்ஜ்ஃவா தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, இலங்கை அரசாங்கம் சரியானதோர் அரசாங்கமாக செயல்படாமையின் காரணமாகவே, அண்மையில் நிலைமைகள் வன்முறையாக மாற்றமுற்றன. பொருள் தட்டுப்பாடுகளால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட கோபமும், விரக்தியுமே, வன்முறையாக உருவெடுத்தது. இதனை அரசியல் தரப்புக்கள் பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் அபிப்பிராயங்களை கூறலாம். ஆனால், அரசியல் தரப்புக்கள் பயன்படுத்திக் கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தியது யார் - என்பதுதான் கேள்வி?

ஆட்சியாளர்களிடம், நாட்டுக்கான, பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் உருப்படியான வேலைத்திட்டம் இருந்திருக்கவில்லை. குடும்பத்தில் எந்தப் பொறுப்பை - யார் வகிப்பது என்பதில் ராஜபக்ஷக்கள் தங்களுக்குள் இழுபறிப்பட்டனரேயன்றி, மக்களை பாதுகாப்பது தொடர்பில் சிந்தித்திருக்கவில்லை. இறுதியில் மஹிந்த ராஜபக்ஷ, பதவி விலகும்போது, தனக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதான போலித் தோற்றத்தை ஏற்படுத்த முற்பட்டதன் விளைவாக, அதுவரையில் அமைதியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் வன்முறையாக உருவெடுத்தன.

ஒரு நாட்டில், பாரியளவிலான பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றபோது - அந்த நாட்டின் பொறுப்பான அரசாங்கம் - முதலில் சுயாதீனமாக செயல்படும் பொருளாதார நிபுணர்களையே அணுகுவதுண்டு. குறிப்பாக உலகளவில், பிரசித்தமான நிபுணர்களை அழைத்து, அவர்களின் ஆலோசனைகளைப் பெறுவதுண்டு. அவர்களின் அபிப்பிராயங்களுக்கு அமைவாகவே, செயல்படுவதுண்டு. இதற்கு மலோசியா ஒரு சிறந்த உதாரணம். ஆனால், இலங்கையிலோ, தம்பியை நியமிப்பதா அண்ணனை நியமிப்பதா என்னும் விவாதங்களே இடம்பெற்றன. பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். உண்மையில் பொருளாதார பிரச்னைகளை கையாளுவதை விடவும், கட்சியை பாதுகாப்பது, அதன் மூலம் தங்களின் குடும்ப அதிகாரத்தை பாதுகாப்பது தொடர்பிலேயே ராஜபக்ஷக்கள் சிந்தித்தனர். இதன் காரணமாகவே நிலைமை மோசமானது. நிலைமை மோசமாகும் - என்று பல பொருளாதார நிபுணர்கள் எச்சரித்த போதிலும் - அதனை ராஜபக்ஷக்கள் கருத்தில் கொள்ளவில்லை.

நெருக்கடி நிலைமையின்போது, ஓர் அரசாங்கம் எவ்வாறு செயலாற்றக்கூடாது - என்பதற்கான உதாரணமாகவே இப்போது இலங்கை நோக்கப்படுகின்றது. போர் வெற்றி பெருமிதங்கள் மூலம் காலாதி காலம் - அரியணையில் இருக்கலாமென்று எண்ணியவர்கள், தெருவெங்கும் மக்களால் நிந்திக்கப்படுகின்றனர். ஏனெனில், பசி வந்தால் பத்தும் பறந்து போகும். சிங்களவர்களின் பசிக்கு முன்னால், ராஜபக்ஷக்களின் துட்டகைமுனு வாதங்கள் செல்லாக் காசாகிவிட்டன. இதில், தமிழ் தேசிய தரப்புகளுக்கும் படிப்பினையுண்டு. அதாவது, இருபத்திநான்கு கரட், தமிழ் தேசியம் பேசிக் கொண்டிருப்பதன் மூலம் மட்டும், தமிழ் மக்களை திருப்திப்படுத்திவிட முடியாது. மக்களின் பொருளாதார பிரச்னைகளும் முக்கியமானவை.

# கண்ணாடி வீட்டினுள் இருந்து கல்லெறியும் நாமல்!

**அலசுவது இராஜதந்திரி**

இந்த மாத ஆரம்பத்தில் - மே 9ஆம் திகதியன்று தென்னிலங்கையில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜாபக்ஷ , வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மே 9ஆம் திகதி இடம்பெற்ற அடாவடித் தனங்களை எடுத்துக்கொண்டால் வெறுமனே ஒரு வன்முறை என்று குறிப்பிடுவதைவிட சாத்வீகத்துக்கு எதிராக முடுக்கிவிடப்பட்ட மிலேச்சத்தனம் என்று குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை தாங்க முடியாது அரச தரப்பினருக்கு, மக்கள் அனுபவித்து வருகின்ற கஷ்ட, நஷ்டங்களை எடுத்துக்காட்டும் விதத்திலேயே காலிமுகத்திடலில் கோட்டா கோ கம சாத்வீக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுவருகின்றது. ஆனால், இந்த அமைதி வழி ஆர்ப்பாட்டத்தை அடாவடித் தனமாகக் கலைக்கும் விதத்திலேயே கடந்த மே மாதம் வன்முறைக் கும்பல் தனது கைவரிசையைக் காண்பித்திருந்தது.

பிரதம மந்திரியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையிலிருந்தே மே 9ஆம் திகதி வன்முறை ஊற்றெடுத்திருந்தது. அன்றைய தினம் முன்னாள் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ “வம்பை விலைக்கு வாங்கும்“ விதத்தில் நிகழ்த்திய உரையின் பின்னரே ஆக்ரோஷமாக கலகக்கார கும்பல் அடாவடித்தனங்களில் குதித்திருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் குடியேறும் வரை அதன் மாண்பு மிக உயர்ந்ததாகவே இருந்தது. அவருக்கு முன்பிருந்த பிரதமர்கள் அலரி மாளிகையின் சிறப்பை மிகக்கண்ணியமான முறையில் பேணியிருந்தனர்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக வசிக்க ஆரம்பித்த காலம் முதல் அலரி மாளிகைக்குள் மேலதிகமாக ஒரு மண்டபம் அமைக்கப்பட்டு அங்கே கட்சி ஆதரவாளர்களும் அவரின் தொகுதியைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டு விருந்துபசாரங்கள் மற்றும் கூட்டங்கள் என்பவை அடிக்கடி நடத்தப்படுவது வழக்கமாகும். ஊடகவியலாளர்கள்கூட ஒன்று கூடல்களுக்காக அங்கே அவ்வப்போது மஹிந்த ராஜபக்ஷவால் அழைக்கப்பட்டிருந்தனர்.

எனவே, அலரி மாளிகை வளவுக்குள் அமைக்கப்பட்டிருந்த அந்த மண்டபத்தினுள்ளேயே மே 9ஆம் திகதி கலவரம் கருக்கட்டியிருந்தது. காலிமுகத்திடல் கோட்டா கோ கம சாத்வீக ஆர்ப்பாட்டம் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறியதையடுத்து அங்கு நின்றிருந்த கும்பல் ஆவேசத்துடன் வெளியே வந்து தனது கைவரிசையைக் காண்பித்திருந்தது.

பெயரளவில் மட்டுமே மே 9ஆம் திகதி அலரிமாளிகை மண்டபத்தினுள் பிரதமர் உரையாற்றுவதுபோல ஒரு மாயை ஏற்படுத்தப்பட்டு மறைமுகமாக வன்முறை தூண்டிவிடப்பட்டிருந்தது. அலரி மாளிகையிலிருந்து ஆரம்பமாகியிருந்த வன்முறைக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட தற்சமயம் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இருபத்தியிரண்டு பேர் நேரடியாகவே வலுச்சேர்த்திருந்தனர்.

வன்முறையாளர்களில் பெண்களும் அடங்கியிருந்தனர். கோட்டா கோ கமவில் சாத்வீக ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது குறிவைக்கப்பட்ட அடாவடித்தனம் குளவிக் கூட்டின் மீது கல்லெறிந்தது போன்ற நிலமையை ஏற்படுத்தியிருந்தது.


மே 9ஆம் திகதி வன்முறை குறித்து நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டபோதே வன்முறையில் ஈடுபட்டோர் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியிருந்தார். ஆனால், வன்முறையில் நேரடியாக ஈடுபட்டவர்கள் மாத்திரமல்ல. அவர்களுக்கு தூபமிடும் பாணியில் நடந்து கொண்டவர்களும் வெறுமனே புனர்வாழ்வளிக்கப்படாது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கையின் பின்னரே புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெரிய தகப்பனாரான சமல் ராஜபக்ஷ, முன்னாள் பிரதமரும் தமது சகோதரருமான மஹிந்த ராஜபக்ஷவே மே 9ஆம் திகதி வன்முறைகளுக்கு பொறுப்பாளியாவார் என்பதை மறைமுகமாக பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். “இரு தடவைகள் ஜனாதிபதியாக பதவிவகித்த பின்னர் மஹிந்த அரசியலிலிருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும்”, என்று சமல் ராஜபக்ஷ கூறியிருந்தார். இதன் மூலம் தற்போது மஹிந்த ராஜபக்ஷ அரசியலுக்கு தகுதியற்றவர் என்பதையும் சமல் ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

ஒரு சில தினங்களுக்கு முன்னர் வெளியான ஆய்வொன்றில் பாராளுமன்றில் தொண்ணூறு உறுப்பினர்களுக்கும் அதிகமானவர்கள் க.பொ.த சாதராணதர கல்வி தகைமையற்றவர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தவிர, தத்தமது தொகுதிகளில் பல தரப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகளுடனும் சம்பந்தப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் அரசியலில் தவழ்ந்து நடைபயில ஆரம்பித்துள்ள நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றில் இருக்கின்ற குழப்பக்கார உறுப்பினர்களுக்கே புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டியவராகின்றார். எனவே வன்முறையாளர்களுக்கு புனர் வாழ்வு தேவை என்று குறிப்பட்டதன் மூலம் “கண்ணாடி வீட்டினுள் இருந்தே நாமல் ராஜ பக்ஷ கல்லெறிந்துள்ளார்“ என்று கருத வேண்டியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 23 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 09
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
புதிய முயற்சியில் இறங்கி வெற்றி பெறுவீர்கள். உங்கள் செயல்கள் முன்னேற்றம் பெறும். குடும்பத்தினருடன் பயணம் செல்வீர்கள். மகிழ்ச்சியான நாள். சந்தர்ப்ப சூழ்நிலை சாதகமாக அமையும்.

**இடபம்**
இன்றைய நாள் மகிழ்ச்சியாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த பிரச்னை தீரும். எதிர காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். தொழிலில் புதிய வழிகளைக் கண்டு லாபம் காண்பீர்கள்.

**மிதுனம்**
பயணத்தில் கவனம் தேவை. நினைத்ததை நிறைவேற்ற முடியாமல் சங்கடப்படுவீர்கள். தேவையற்ற பிரச்னை தலைதூக்கும். தொழிலில் நெருக்கடிக்கு ஆளாகலாம். வருமானம் குறையும்.

**கடகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். நண்பர்களின் வழியே எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும்.

**சிம்மம்**
நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பண வரவு இன்று வரும். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். மனதில் இருந்த பிரச்னை மறையும்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் இழுபறியாகும். பிள்ளைகளின் வழியே சங்கடங்கள் உண்டாகும். பொருளாதார சிக்கலால் நினைத்தபடி செயல்பட முடியாது. குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**துலாம்**
உறவினரால் உதவி உண்டாகும். பணப்பிரச்னையால் செயலில் பின்னடைவு உண்டாகும். மறைமுக எதிர்ப்புகளை முறியடித்து முன்னேறுவீர்கள். தேவையற்ற பயம் வந்து போகும்.

**விருட்சிகம்**
உறவினரால் உதவி கிடைக்கும். சவாலான ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். செயலில் உங்கள் அனுபவ அறிவு வெளிப்படும். தொழில் முன்னேற்றமாகும். எதிர்பார்த்த லாபம் வந்து சேரும்.

**தனுசு**
குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் விலகும். செலவுகள் அதிகரிக்கும். மகிழ்ச்சியான நாள். எதிர்பார்த்தவற்றில் இருந்து லாபம் வந்து சேரும். தொழிலை விரிவு செய்வீர்கள். பொருளாதார நிலை மேம்படும்.

**மகரம்**
விருந்து, விசேஷம் என செல்வீர்கள். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செல்வாக்கு மிக்கவர்களை சந்திப்பீர்கள். அவர்கள் வழியில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்திற்காக நேரத்தை ஒதுக்குவீர்கள்.

**கும்பம்**
செலவு கூடும். வீட்டிற்குத் தேவையானதை வாங்குவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி ஆலோசிப்பீர்கள். கோயிலுக்குச் செல்வீர்கள். சுபநிகழ்ச்சி நடத்துவது பற்றி யோசிப்பீர்கள்.

**மீனம்**
எதிர்பார்த்த பணவரவுகள் கைக்கு வந்து சேரும். எதிர்காலம் குறித்து குடும்பத்தினருடன் ஆலோசிப்பீர்கள். பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும். இன்று மாலை வரை மகிழ்ச்சியாக செல்லும். செலவுகள் உண்டாகும்.

- சிறை விடுப்பு வழங்க உறுதி -

# 19 நாள் உண்ணாவிரதத்தை நிறைவு செய்தார் முருகன்!

வேலூர், மே 23

6 நாள் சிறை விடுப்பு (பரோல்) கேட்டு சிறையில் உண்ணாவிரதம் இருந்து வந்த முருகன் தனது போராட்டத்தை கைவிட்டார்.

அவருக்கு சிறை விடுப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் வழங்கிய உத்தரவையடுத்தே 19 நாட்கள் தொடர்ந்த அவரின் உண்ணாவிரதம் நிறைவுக்கு வந்தது.

நேற்று முன்தினம், முருகனின் வழக்கறிஞர் புகழேந்தி அவரை சிறையில் சந்தித்து பேசினார். இதன்போது அதிகாரிகளின் உத்தரவாதம் அவருக்கு தெரிவிக்கப்பட்டது. இதேசமயம், பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டமை போன்று ஏனைய 6 பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதல்வரின் உறுதியளிப்பு செய்தியும் அவரிடம் கூறப்பட்டது. இதையடுத்தே அவர் தனது உண்ணாவிரத போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு சிறை விடுப்பு வழங்கப்பட்டபோதிலும், இலங்கையை சேர்ந்தவர்களுக்கு இதுவரை சிறை விடுப்பு அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூட்டணியிலிருந்து வெளியேறுங்கள் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்!




கும்பகோணம், மே 23

தி. மு. க. கூட்டணியிலிருந்து வெளியேற தங்கள் கட்சித் தலைமையை வலியுறுத்தி கோவில்பட்டியில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான பேறறிவாளனை வாழ்த்தியதோடு, மேலும் 6 பேரையும் விடுதலை செய்வோம்' என்று கூறிய முதல்வர் மு. க. ஸ்டாலினை கண்டிப்பதாகவும், தி. மு. க. கூட்டணியில் இருந்து காங்கிரஸ் வெளியேற வேண்டும் என்று, தங்கள் கட்சித் தலைமையை வலியுறுத்தியும் கோவில்பட்டியில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

(ஐ)

# ராஜீவ் காந்தி நினைவுதினம் சென்னையில் அனுஷ்டிப்பு!

சென்னை, மே 23

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 31ஆம் ஆண்டு நினைவு தினத்தன்று அவரின் நினைவிடத்தில் காங்கிரஸ் தலைவர்கள் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதையொட்டி, ராஜீவ் நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, இளநீர், பழ வகைகள், உணவுப் பொருட்கள் படையலாக வைக்கப்பட்டிருந்தன.

தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி மற்றும் நிர்வாகிகள், மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். வட சென்னை கிழக்கு மாவட்டத் தலைவர் எம்.எஸ்.திரவியம் தலைமையிலான கட்சியினர் திருவொற்றியூரில் இருந்து யாத்திரையாகக் கொண்டு வந்த ராஜீவ் ஜோதி, நினைவிடத்தில் வைக்கப்பட்டது.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் கே.எஸ்.அழகிரி கூறும்போது, "ராஜீவ் படுகொலை செய்யப்பட்ட போது எங்களது கண்ணீர் ஆறாய் ஓடியது.

ஆனால், அந்த கொலையாளிகளின் விடுதலையை தற்போது, திருவிழாவாகக் கொண்டாடும்போது எங்கள் இதயத்தில் இருந்து ரத்தக் கண்ணீர் வடிகிறது. குற்றவாளியை கடவுளாக கருத முடியாது. குற்றம் செய்தவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

தேர்தலுக்கு முன்பே, எங்கள் கூட்டணியில் இருந்தவர்கள், ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொன்னவர்கள்தான்.

இதைத் தெரிந்துதான் நாங்களும் கூட்டணி வைத்துக் கொண்டோம். அவரவர் கொள்கை அவரவர்களுக்கு. இதற்கும் கூட்டணிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்றார்.

பின்னர், சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலத் தலை வர் உள்ளிட்டோர், ராஜீவ் படத்துக்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். மேலும், கொடுஞ் செயல் எதிர்ப்பு உறுதி மொழி ஏற்றனர். (ஐ)

# சேமிப்பை நிவாரணத்துக்கு அளித்த சிறுமி!




இராமேஸ்வரம், மே 23

சைக்கிள் வாங்குவதற்காக சேமித்த பணத்தை 3ஆம் வகுப்பு மாணவியான கோபிகா ஸ்ரீ என்பவர் இலங்கை நிவாரணத்துக்கு வழங்கியுள்ளார்.

இலங்கை நிவாரணத் திட்டத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் அண்மையில் அறிவித்திருந்தார். முதல் கட்டமாக ஒரு கப்பல் அனுப்பப்பட்ட நிலையில், ஏனைய பொருட்களும் விரைவில் அனுப்பப்படவுள்ளன.

இந்நிலையில், 8 வயதான கோபிகா ஸ்ரீ சைக்கிள் வாங்குவதற்காக கடந்த சில மாதங்களாக சேமித்த 2002 இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 7ஆயிரத்து 400 ரூபாயை நிவாரணத் திட்டத்துக்கு அந்தப் பகுதியின் கோட்டாட்சியர் ஊடாக வழங்கினார். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் நேற்றும் பெற்றோலுக்கு நீள வரிசை!





யாழ்ப்பாணம், மே 23

**யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெறுவதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.**

நேற்று அதிகாலை முதல் கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, அச்சுவேலி, சுன்னாகம், வடமராட்சி உட்பட யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

சில இடங்களில் மக்கள் வரிசைகளில் ஒழுங்குமுறையில் காத்திருந்தாலும், பல இடங்களில் வரிசைகளால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதேசமயம், பரீட்சைக் கடமையில் ஈடுபடுவோர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருட்கள் வழங்கப்பட்டன.

ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருட்களை மட்டுப்படுத்தப்பட்டளவில் வழங்கினாலும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டே காணப்பட்டன. (ஐ-3)

# எரிபொருள் தாங்கிக்கு சேதம் விளைவித்தோர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், மே 23

சுன்னாகம் நகரின் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து எரிபொருள் தாங்கி சேதப்படுத்தப்பட்டது. இதை யடுத்து இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறையையடுத்து, அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள். இந்தநிலையில், சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்துள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட முரண்பாடொன்றையடுத்து பெற்றோல் ஏற்றி வந்த தாங்கியின் கண்ணாடிகளை இரு இளைஞர்கள் உடைத்து சேதப்படுத்தினர்.

இதையடுத்து, 27, 29 வயதான அந்த இரு இளைஞர் களையும் சுன்னாகம் பொலிஸார் உடனடியாகக் கைது செய்தனர். (ஐ)

# ஆசிரியர் காதில் அறைந்ததில் மாணவனுக்கு செவி பாதிப்பு!

யாழ்ப்பாணம், மே 23

ஆசிரியர் காதைப்பொத்தி அறைந்ததில் மாணவனின் செவிப் பறை கிழிந்தது. பாதிக்கப்பட்ட மாணவன் தற்போது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ். நகரில் பிரபல பாடசாலை ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவன் மருத்துவ பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் அவரது செவிப் பறை சவ்வு பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பொலிஸ் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யாழ். நகரில் விற்பனையகம் தீயில் எரிந்து முற்றாக நாசம்!



யாழ்ப்பாணம், மே 23

யாழ். நகரில் விற்பனை நிலையம் ஒன்று தீப்பற்றி எரிந்து முற்றாக நாசமானது. நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஸ்ரான்லி வீதியில் - ஈ. பி. டி. பி. பணி மனை முன்பாகவுள்ள பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனையகமே இவ்வாறு தீயால் அழிவடைந்தது.

பரவிய தீயைக் கட்டுப்படுத்துவற்கு யாழ். மாநகர சபை முயற்சிகளை எடுத்தபோதும் அது பலனளிக்கவில்லை.

இதேசமயம், தீப்பற்றிய விற்பனையகத்தில் பணியாளர் ஒருவர் தூங்கிக் கொண்டிருந்தார் என்றும், அவர் உடனடியாக அங்கிருந்து வெளியேறியதால் சிறு காயங்களுடன் தப்பித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தீ பற்றியது எவ்வாறு என் பதற்கான காரணம் உடனடியாகத் தெரிய வராத நிலையில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை,

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள பிரபல ஐஸ்கிறீம் கடை ஒன்றின் மேல் தளத்திலும் தீ பரவியது. எனினும், அது உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விலைபோகும் எம். பிக்களை மக்கள் தெரிவுசெய்யக்கூடாது

## முன்னாள் துணைவேந்தர் மோகனதாஸ்

யாழ்ப்பாணம், மே 23

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டுமா? தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி விடலாம் என்ற எண்ணம் மாறவண்டும் என்று யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றத்துக்கான மக்களின் பங்களிப்பு என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கையில் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாற்றம் அடைய வேண்டும். ஆனால், ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை மாற்றி விட்ட பின்னரும் தரகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி எதை வேண்டுமானாலும் செய்து விடலாம் என்ற எண்ணம் தற்போது எழுந்துள்ளது.

மூன்றில் இரண்டு வேண்டுமா தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை பேசுவதற்கு தரகர்கள் இருக்கின்றார்கள். அதனை அவர்கள் விலைபேசி பெற்றுக் கொடுப்பார்கள். இவ்வாறான நிலையில் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் விலைபேசி விடலாம் என்ற எண்ணம் மன வேதனையை தருகிறது.

எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் ?எப்படி வளர்ந்தார்கள்? எப்படி அரசியலுக்கு வந்தார்கள்? தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்பது தொடர்பில் மக்கள் அவதானம் செலுத்த வேண்டும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி வாங்கி விடலாம் என்ற எண்ணத்தில் செயல்படுவோருக்கு விலை போக தயாராக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை இனி வரும் காலங்களில் மக்கள் தெரிவு செய்யக் கூடாது - என்றார். (ஐ)

# மாங்குளத்தில் விபத்து; நான்கு பேர் படுகாயம்!

மாங்குளம், மே 23

ஹைஏஸ் வாகனமும் உழவு இயந்திரமும் மோதியதில் நால்வர் படுகாயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - மாங்குளத்தில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் உழவு இயந்திரத்தின் பின்பக்கமாக மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

உழவு இயந்திரத்தின் பெட்டியின் பின்புறத்தில் எச்சரிக்கை சமிக்ஞைகள் இன்மையே இந்த விபத்துக்குக் காரணம் என்று தெரியவருகின்றது.



விபத்துக் குறித்த விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே 23

வலி. தென்மேற்கு - சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவு வெளியிடும் “கலாதரம்” - 4 பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலை, கலாசாரம், சமயம், மருத்துவம், பாரம்பரியங்கள், பிரதேச ஆளுமைகள் தொடர்பான தகவல்கள், வாழ்வியல் கோலங்கள், இடம்பெயர்வுகள், சிறுகதை, கவிதை, கட்டுரை, முதலிய விடயப்பரப்புகளில் ஒன்றை ஆக்கமாக அனுப்ப முடியும்.

ஆக்கத்தை எழுதுபவர் தன்னைப் பற்றிய விவரங்களுடன், சிறிய புகைப்படத்தையும் இணைத்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# அளவெட்டியில் வாள்வெட்டு! ஐந்து சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், மே 23

வன்முறைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்த அளவெட்டி கனி என்ற லைக்கப்படுபவர்மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இவர்களை நேற்று கைது செய்தனர்.

திருட்டு மோட்டார் சைக்கிளை பயன்படுத்தியே இந்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 17ஆம் திகதி மாலை 6. 30 மணியளவில் சண்டிலிப்பாய் தொட்டிலடி சந்தியில் இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த ஏ. ரதீஸ்வரன் (வயது-37) என்பவரே தலையில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

03 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேரே இந்த தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதனடிப்படையில் வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டை சேர்ந்த இருவர், தெல்லிப்பழையைச் சேர்ந்த இருவர் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் என ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயன்படுத்திய இரு மோட்டார் சைக்கிள்களும் வாள்களும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# யாழில் ஒரு கிலோ நாட்டரிசி ஒரு ரூபாய்க்கு விற்பனை!

யாழ்ப்பாணம், மே 23

**சிறீலங்கா சுமித்ரயோ யாழ். கிளை தொண்டர்களால் நேற்று முன்தினம் ஒரு கிலோ நம்பர் 1 நாட்டரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டது.**




தற்கொலை தடுப்பு செயல்பாட்டை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்வதற்காகவும் - தற்கால பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் மக்களுக்கு மன ரீதியான ஆறுதல் தேவை என்பதை உணர்த்தும் முகமாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேசமயம், ஒரு ரூபாய் உள்ளவருக்கு மட்டுமே அரிசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. யாழ். முதிரைச் சந்தியை அண்மித்த கல்வியங்காடு சட்டநாதர் கோவிலடியில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

# எரிவாயுவுடன் மேலும் இரு கப்பல்கள் வந்தன!

கொழும்பு, மே 23

சமையல் எரிவாயு ஏற்றி வந்த இரண்டு கப்பல்களுக்கு 70 இலட்சம் டொலர்களை இன்று விடுவிக்க எதிர்பார்ப்பதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டு கப்பல்களில் இருந்து எரிவாயு தரையிறங்கியதன் பின்னர் இரண்டு வாரங்களுக்கு போதுமான அளவு எரிவாயு நாட்டில் இருக்கும் என அதன் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்திடம் தற்போது ஆறு நாள்களுக்கு தேவையான எரிவாயு கையிருப்பு உள்ளது. நேற்று முதல் 80 ஆயிரம் சிலிண்டர்களை சந்தைக்கு வழங்கப்பட ஆரம்பித்ததாகவும் அவர் கூறினார்.

மேலும், 80 ஆயிரம் சிலிண்டர்களில் 50 ஆயிரம் கோப் குழுவின் பரிந்துரையின் பேரில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு வழங்கப்படும் என்றும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

# மோட்டார் சைக்கிள் மோதியதில் நடந்து சென்ற சிறுவன் படுகாயம்!

மன்னார், மே 23

மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் 7 வயது சிறுவன் படுகாயமடைந்தார்.

மன்னார் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

சிறுவன், அவரின் தாயாருடன் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் சிறுவனை மோதியதுடன், சிறுவனை சிறிது தூரம் இழுத்துச் சென்றது.

அந்தப் பகுதி மக்களால் மீட்கப்பட்ட சிறுவன் உடனடியாக மன்னார் மாவட்ட பொது மருத்துவனையில் சேர்க்கப்பட்டார்.

இதேசமயம், விபத்தை ஏற்படுத்திய இளைஞர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த விபத்துக் குறித்து பொலிஸார் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ)

# 21ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ராஜபக்ஷர்கள் அனுமதிக்கவே மாட்டார்கள்

## சம்பிக்க ரணவக்க எம். பி.

கொழும்பு, மே 23

காலிமுகத்திடல் சம்பவத்தை தொடர்ந்தும் ராஜபக்ஷர்கள் குடும்பம் இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலைமையே ஏற்படும். அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைத்த ராஜபக்ஷர்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

43 ஆவது படையணியின் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாடு சுதந்திரம் பெற்ற காலத்தின் பின்னர் மிக மோசமான பொருளதார நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியினை தீவிரப்படுத்தி, முழு சமூக கட்டமைப்பிற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட வரையறையற்ற அரச முறை கடன்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மூல காரணியாக அமைகிறது.

2005 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் அதிக வட்டிவீதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசமுறை கடன்களினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளினால் நாட்டுக்கு எவ்வித வருவாயும் கிடைக்கப்பெறவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதே தவிர இலாபத்தை பெற்றுக்கொடுக்கவில்லை.

அரச முறை கடன்களை மீள் செலுத்த முடியாது என மத்திய வங்கி கடந்த மாதம் 12ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவித்ததை தொடர்ந்து இலங்கை வங்குரோத்து நிலைமையினை அடைந்துவிட்டது என்பதை சர்வதேசம் விளங்கிக்கொண்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் சீனா வழங்கிய இரு தரப்பு கடனை மீள பெற்றுக்கொள்ள அரசாங்கத்துக்குப் பாரிய அழுத்தம் பிரயோகிப்படுகிறது.

அரச முறை கடன் மறுசீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு நட்பு நாடுகள் தொடர்ந்து இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும்.

இந்தியா தற்போது பல்வேறு வழிமுறைகளில் உதவி புரிந்த நிலையில் இருந்தாலும் அதனை தொடர்ந்து எதிர்பார்க்க முடியாது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுக்கு தேசிய மட்டத்தில் பல திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள கூடிய நிலையிலான அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

சர்வகட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க பிரதான எதிர்க்கட்சிகள் மறுப்பு தெரிவித்ததை தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் போராட்டத்தையும், அதனுடனான வன்முறை சம்பவங்களை தொடர்ந்தும் ராஜபக்ஷர்கள் இன்னும் உரிய அரசியல் பாடத்தை கற்றுக்கொள்ளவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கும் ராஜபக்ஷர்கள் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கிறார்கள். பிரதி சபாநாயகர் தெரிவு ஊடாக அதனை விளங்கிக்கொள்ள முடிந்தது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீள அமுல்படுத்தவும், 21ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்தவும் ராஜபக்ஷர்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள்.

ராஜபக்ஷர்களின் தலையீடு இல்லாத அரசாங்கத்தால் மாத்திரமே தற்போதைய பிரச்னைகளுக்கு நிலையான சிறந்த தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ஐ)



# மன்னார் கரையோரத்தில் சிரமதானம் முன்னெடுப்பு

மன்னார், மே 23

மன்னார், தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா வரையிலான கடற்கரை கரையோர பகுதியை தூய்மையாக்கும் நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அந்த அமைப்பின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் குறித்த தூய்மையாக்கல் நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது மனித உரிமைகள் செயல்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மற்றும் இளைஞர், யுவதிகள், சிறுவர்கள் கலந்துகொண்டு தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா கடற்கரை வரையிலான கரையோரப் பகுதிகளை துப்புரவு செய்தனர்.

-இதன் போது கண்ணாடி மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் உள்ளிட்ட கழிவுப்பொருட்கள் அப்பகுதியில் இருந்து அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட கழிவுப் பொருட்கள் மன்னார் பிரதேச சபையின் உதவியுடன் அப்பகுதியில் இருந்து கொண்டு செல்லப்பட்டன. (ஐ)



## அனுமதியின்றி மாடுகளை ஏற்றிச் சென்றவர் கைது!

வவுனியா, மே 23

வவுனியா ஓமந்தையில் அனுமதிப்பத்திரங்கள் இன்றி அதிகளவான மாடுகளை வாகனத்தில் ஏற்றிச்சென்ற நபர் ஒருவரை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி மாடுகளை ஏற்றிச் சென்ற வாகனத்தை ஓமந்தையில் வழிமறித்த பொலிஸார் அதில் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அனுமதிப் பத்திரம் இன்றி அதிகளவான மாடுகள் ஏற்றி செல்லப்படுகின்றமை கண்டறியப்பட்டது. வாகனத்தின் சாரதியை கைது செய்த பொலிஸார் மாடுகளையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்றையதினம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## 50ஆயிரம் டொலர்களை வைத்திருந்த நபர் கைது!

கொழும்பு, மே 23

கொழும்பு - வெலிக்கடையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 50,000 அமெரிக்க டொலர்களை (இதன் இன்றைய மதிப்பு ஒரு கோடியே 77 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்) வைத்திருந்த குற்றச்சாட்டில் 36 வயதுடைய நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத உண்டியல் மற்றும் ஹவாலா பணப்பரிமாற்ற முறைகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்ய குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கடந்த வாரம், இலங்கை மத்திய வங்கி, இலங்கையர் ஒருவர் வைத்திருக்கும் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் சட்ட வரம்பு குறித்த ஏற்பாடுகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தது.

அந்த வகையில், இலங்கையில் வசிப்பவர் தம்மிடம் வைத்திருக்கக்கூடிய வெளிநாட்டு நாணயத்தின் சட்ட வரம்பானது 15,000 அமெரிக்க டொலர்களில் இருந்து 10,000 அமெரிக்க டொலர்களாக குறைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படலாம் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மக்களின் கலவரம் ஜூனில் வெடிக்கும்!

### எச்சரிக்கிறார் சம்பிக்க எம். பி.

கொழும்பு, மே 23

**நாடு முற்றாக வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது. எரிபொருள் மற்றும் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்கும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டி வரும். இறுதியில் பொருட்களை பெற்றுக் கொள்வது மக்கள் மத்தியில் கலவரமாக தோற்றம் பெறும் வாய்ப்புள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் முறையான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் இன்மையால் நாடு முழுமையாக வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது.

நேச நாடுகளான சீனா, ஜப்பான் மற்றும் இந்தியாவிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மீளசெலுத்தப்படாது என்று ஏப்ரல் மாதம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீள் செலுத்தமல் புதிய கடன்களை பெற்று காள்வது பொருத்த மற்றது. தற்போது இது தொடர்பாக தனது அதிருப்திகளை சீனா வெளியிட்டு இருக்கிறது.

மேலும் சீனாவுக்கு இந்த வருட இறுதி காலப்பகுதிக்குள் மொத்தமாக சுமார் 920 மில்லியன் டொலர்கள் செலுத்த வேண்டியிருக்கிறது.

இலங்கைக்கு உலக வங்கி தற்போது 400 மில்லியன் டொலர்களை வழங்குவதாக தெரிவித்த நிலையில் அதில் ஒரு பகுதியை கொண்டு எரி



பொருள், எரிவாயு, மருந்து பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யலாம். இதன் மூலம் தற்காலிகமாக இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு கண்டாலும் மீண்டும் பொருட்களுக்கு தட்டுப்பாடு மற்றும் வரிசையில் நிற்கும் யுகம் தோன்றும்.

உலக சந்தையில் எரிவாயு உட்பட பல பொருட்களுக்கான விலைகள் குறைவடைந்துள்ள நிலையில் இலங்கையில் மாத்திரம் அதிக விலைக்கு கொடுத்து பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமையில் நாட்டு மக்கள் உள்ளனர். இந்நிலையில் ஜூன் மாதம் நடுப்பகுதியில் நிச்சயமாக மீண்டும் ஒரு தாங்கிக் கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடி நிலைமை உருவாகும். அது நிச்சயமாக பெரும் கலவரமாக தோற்றம் பெறும்.

ஒரு கட்டத்துக்கு மேல் பொருளாதார நெருக்கடியை தாங்கிக் கொள்ள முடியாத மக்களால் எரிபொருள், எரிவாயு, மருந்து பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுகளை பெற்றுக்கொள்வதற்காக இந்த கலவரம் உருவாகும் என்பது உறுதி.

இதனால் இது கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரம் போல் இல்லாமல் அரசியல்வாதிகளின் சொத்துக்கள் மட்டும் அன்றி நாட்டில் உள்ள அனைவரினதும் சொத்துகளும் கொள்ளையிடப்படும். நாடு தற்போது பாதாளத்துக்குள் தள்ளப்பட்டு விட்டது.

நாட்டுக்குகிடைக்கபெறும் டொலர்களை கொண்டு மக்களுக்கு எரிபொருள், எரிவாயு பெற்றுத் தருவதாக கூறி மக்களை ஏமாற்றுவதை விடுத்து நாட்டை கட்டியெழுப்ப முறையான திட்டங்கள் வகுக் கப்பட வேண்டும். அதற்கு அர சியல் ஸ்திரத்தன்மை பெற வேண்டும். சர்வ கட்சிகளையும் இணைத்து அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக ளுக்கு தீர்வு காண வேண்டும் - என்றார்.

## பொது பாதுகாப்பு அமைச்சு செயலர் நீதியரசரிடம் மன்னிப்பு கோரினார்!

கொழும்பு, மே 23

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜகத் அல்விஸ், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அண்மையில் பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பிரதம நீதியரசருக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். அந்த கடிதத்தை சட்டமா அதிபருக்கு அனுப்பியதுடன், கடிதத்தை அனுப்பிய பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்மீது நடவடிக்கை எடுக்குமாறு, பிரதம நீதியரசர் கூறியதை அடுத்தே மன்னிப்பு கோரப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) அல்விஸ் தனது அதிகாரத்தை மீறி பிரதம நீதியரசருக்கு நேரடியாக கடிதம் எழுதியமைக்காக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் கடுமையாக எச்சரித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் (ஓய்வு) அல்விஸ், நாடு முழுவதும் நடந்து வரும் போராட்டங்களை கருத்தில் கொண்டு, சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதில் பொலிஸார் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தடைகள் குறித்து விவாதிக்க பொலிஸ் மா அதிபர் மற்றும் பிற மூத்த பொலிஸ் அதிகாரிகளுடனான சந்திப்பிற்கு பிரதம நீதியரசரிடம் நேரம் கோரி கடிதம் எழுதியிருந்தார்.

முற்றிலும் தேவையற்ற கடிதத்தை அனுப்பிய பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை கடுமையாக எச்சரிக்குமாறு அறிவுறுத்தல்களுடன் தலைமை நீதிபதி கடிதத்தை சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளார்.

இதன்படி, தனது அதிகாரத்தை மீற வேண்டாம் என்று அமைச்சின் செயலாளருக்கு சட்டமா அதிபர் முதல் மற்றும் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார். சட்டமா அதிபரின் எச்சரிக்கையை தொடர்ந்து, மேஜர் ஜெனரல் (ஓய்வு) அல்விஸ் மீண்டும் தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதி மன்னிப்பு கோரியுள்ளார்.

ஏற்கனவே அனுப்பப்பட்ட அந்தக் கடிதம் சட்டமா அதிபருக்காக எழுதப்பட்டதாகவும், தவறுதலாக தலைமை நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டதுடன், அந்த சம்பவத்திற்காக தனது ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தியதோடு, கவனக்குறைவுக்கு மனனிப்பும் கோரினார்.

(ஐ)

### பெற்றோல் கிடைக்காத கோபத்தில்

## எரிபொருள் நிலைய உரிமையாளரின் வீட்டுக்குத் தீ வைத்தனர் விஷமிகள்

அநுராதபுரம், மே 23

லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் ஒருவரின் வீடு நேற்று முன்தினம் இரவு விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

அநுராதபுரம், இபலோகம பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் வீடே இவ்வாறு தீ வைக்கப்பட்டது.

நேற்றைய தினம் அவரின் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு ஏராளமானவர்கள் பெற்றோலுக்காக காத்திருந்தனர். ஆனால், போதிய எரிபொருள் இல்லாததால குறிப்பிட்டளவான போருக்கு பெற்றோல் வழங்கப்படவில்லை.

இதையடுத்து, ஆத்திரமடைந்த கும்பல் ஒன்று எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் வீட்டுக்கு தீ வைத்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த தீ வைப்பு சம்பவத்தின்போது எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர், அவரின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் வீட்டினுள் இருந்துள்ளனர். உடனடியாக அப்பகுதி மக்கள் தீயை அணைத்து அவர்களை காப்பற்றினர்.

எனினும், இரண்டு பிள்ளைகளின் பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் உட்பட பல சொத்துக்கள் தீயில் எரிந்து நாசமாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பிள்ளை இன்று ஆரம்பமாகும் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ஆஸியின் புதிய பிரதமராக அந்தோணி அல்பானீஸ்:

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமரான அந்தோணி அல்பானீஸ் 59 வயதான நீண்டகால அரசியல்வாதி ஆவார். அவர் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக பாராளு மன்ற உறுப்பினராக பணியாற்றி உள்ளார்.

கெவின் ரூட் மற்றும் ஜூலியா கில்லார்ட் அரசாங்கங்களின் கீழ் அமைச்சரவை அமைச்சராக இருந்தார், மேலும் அவர் 2013 இல் ரூட்டின் துணைப் பிரதமராக நியமிக்கப்பட்டவர். அதன் பின் 2019 முதல் ஆஸ்தி ரேலிய எதிர்க் கட்சித் தலைவராக இருந்துள்ளார்.

அந்தோணி அல்பானீஸ் சிட்னியில் ஐரிஷ் தாய் மற்றும் இத்தாலிய தந்தைக்கு 1963 இல் பிறந்தார். அவர் செயின்ட் மேரிஸ் கதீட்ரல் கல்லூரியில் பயின்று, பின்னர் பொருளாதார பட்டப்படிப்பை சிட்னி பல்கலைக் கழகத்தில் பயின்றார்.



அவர் ஒரு மாணவராக தொழிலாளர் கட்சியில் சேர்ந்து, பின் அந்தோணி அல்பானீஸ் 1996 தேர்தலில் பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்,

### தொழிற்கட்சி இளம் அரசியல்வாதி:

நியூ சவுத் வேல்ஸில் உள்ள கிரேண்ட்லர் தொகுதியில் வெற்றி பெற்று, முதன் முதலில் 2001 இல் நிழல் அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டார். இறுதியில் 2006 இல் எதிர்க்கட்சி வணிகத்துறை மேலாளராகவும் கடமையாற்றினார்.

2007 தேர்தலில் தொழிற்கட்சியின் வெற்றிக்குப் பிறகு, அந்தோணி அல்பானீஸ் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் பிராந்திய வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சராகவும், உள் கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சராகவும் பணியாற்றினார்.

2010 முதல் 2013 வரை கெவின் ரூட் மற்றும் ஜூலியா கில்லார்டுக்கு இடையே ஏற்பட்ட தலைமைப்பீட கருத்து முரண்பாடுகளில் இருவரின் நடத்தையையும் பகிரங்கமாக விமர்சித்தார். அத்துடன் ஒற்றுமைக்கும் அழைப்பு விடுத்தார். பின்னர் ஜூன் 2013 இல் இருவருக்கும் இடையிலான இறுதித் தலைமை வாக்கெடுப்புக்குப் பிறகு, அல்பானீஸ் தொழிலாளர் கட்சியின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் துணைப் பிரதமராகப் பதவியேற்றார்.

2013 பாராளுமன்ற தேர்தலில் தொழிற் கட்சி தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அல்பானீஸ் பில் ஷார்ட்டனுக்கு எதிராக அடுத்த தலைமைத் தேர்தலில் நின்றார். அந்தோணி அல்பானீஸ் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களை வென்றாலும், தொழிற்கட்சி எம்.பி.க்கள் பலரும் பில ஷார்ட்டனையே வெற்றி பெறச் செய்தனர்.

ஆயினும் அவரது நிழல் அமைச்சரவையில் அந்தோணி அல்பானீஸ் நியமிக்கப்பட்டார். 2019 பாராளுமன்ற தேர்தலில் தொழிற்கட்சியின் மூன்றா வது தொடர்ச்சியான தோல்விக்குப் பிறகு, பில் ஷார்டன் ராஜினாமா செய்ததை தொடர்ந்து தலைமைத் தேர்தலில் பரிந்துரைக்கப்பட்ட ஒரே நபர் அந்தோணி அல்பானீஸ் ஆவார்,

அவர் தொழிலாளர் கட்சியின் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார், பின் பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். 2022 பாராளுமன்ற தேர்தலில், அந்தோணி அல்பானீஸ் தனது தொழிற்கட்சியை தற்போதைய பிரதம மந்திரி ஸ்காட் மோரிசனுக்கு எதிராக வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் எதிர்க்கட்சியிலிருந்து பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட நான்காவது தொழிலாளர் தலைவர் ஆனார். அவுஸ்ரேலிய நாட்டின் ஆறாவது பெரிய இனக்குழுவைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அந்தோணி அல்பானீஸ் வரலாற்றில் முதல் இத்தாலிய-ஆஸ்திரேலிய பிரதம மந்திரியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

> இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் எதிர்க்கட்சியிலிருந்து பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட நான்காவது தொழி லாளர் தலைவர் ஆனார். அவுஸ்ரேலிய நாட்டின் ஆறாவது பெரிய இனக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்தோணி அல்பானீஸ் வரலாற்றில் முதல் இத்தாலிய–ஆஸ்திரேலிய பிரதம மந்திரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### இளமைப்பருவமும், கல்வியும்:

அந்தோணி அல்பானீஸ் சிட்னியில் கேம்பர்டவுன் புறநகர் பகுதியில் வளர்ந்தார். அந்தோணி அல்பானீஸின் தாய் பகுதிநேர துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்தார். தாயார் நாள்பட்ட முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டமையால் அவரது ஊனமுற்றோர் ஓய்வூதியம் மற்றும் அவரது பாட்டியின் முதியோர் ஓய்வூதியத்தில் குடும்பம் பிழைத்தது.

அல்பானீஸ் கேம்பர்டவுனில் உள்ள செயின்ட் ஜோசப் ஆரம்பப் பள்ளியிலும், செயின்ட் மேரிஸ் கதீட்ரல் கல்லூரியிலும் பயின்றார். பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, சிட்னி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் படிக்கும் முன் காமன்வெல்த் வங்கியில் இரண்டு



ஆண்டுகள் பணியாற்றினார்.

பின்னர் அரசியலில் ஈடுபட்டு மாணவர் பிரதிநிதி கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.அங்குதான் அவர் லேபர் கட்சியின் இடது பிரிவின் முக்கிய வீரராக தனது எழுச்சியைத் தொடங்கினார். மாணவர் அரசியலில் இருந்த காலத்தில், அந்தோணி அல்பானீஸ் இளம் தொழிலாளர் கட்சிக்குள் ஒரு குழுவை வழிநடத்தினார். இக்குழு "ஆஸ்திரேலியாவின் கம்யூனிஸ்ட் கட்சி, அணு ஆயுதக் குறைப்புக்கான மக்கள் மற்றும் ஆப்பிரிக்க போன்ற பரந்த இடதுசாரி குழுக்களுடன் தொடர்பைப் பேணி வந்தது.

அந்தோணி அல்பானீஸ் தனது பொருளாதாரப் பட்டப் படிப்பை முடித்த பிறகு, அப்போதைய உள்ளாட்சி மற்றும் நிர்வாக சேவைகளுக்கான அமைச்சரான டாம் யூரெனிடம் ஆராய்ச்சி அதிகாரியாகவும் பணியாற்றினார்.

1996 தேர்தலில் கிரேண்ட்லரின் தொகுதியில் மீண்டும் போட்டியிடப் போவதில்லை என Jeannette McHugh அறிவித்தபோது, அந்தோணி அல்பானீஸ் அத்தேர்தலில் வெற்றி பெற்றார்.

சிட்னி விமான நிலையத்தில் மூன்றா வது ஓடுபாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து விமானத்தின் சத்தம் ஒரு பெரிய அரசியல் பிரச்சினையாக இருந்தது.

1995 நியூ சவுத் வேல்ஸ் பிரதிநிதிகள் சபையில் அவர் தனது முதல் உரையில், சிட்னி விமான நிலையத்தில் மூன்றாவது ஓடுபாதையைக் கட்டுவது, விமானத்தின் சத்தம் மற்றும் சிட்னிக்கு சேவை செய்ய இரண்டாவது விமான நிலையத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், பொதுவாக பொது உள்கட்டமைப்புக்கு நிதியளிப்பதற்கான தனது ஆதரவைப் பற்றியும் பேசினார். பன்முக கலாச்சாரம் , சொந்த தலைப்பு, சமூக ஊதியம் மற்றும் குழந்தை பராமரிப்பு என வாக்காளர்களின் நலன்களுக்காகவும், உழைக்கும் வர்க்க மக்களுக்காகவும், தொழிலாளர் இயக்கத்திற்காகவும், ஒரு தேசமாக நமது முற்போக்கான முன்னேற்றத் திற்காகவும் நிற்கும் ஒருவராக என்னை நினைவில் கொள்ள முடிந்தால் நான் திருப்தி அடைவேன் என்றும் கூறியமை பலராலும் பாராட்டப்பட்டார். பாராளுமன்றத்தில் தனது முதல் ஆண்டிலேயே வடக்குப் பிரதேசத்தின் கருணைக்கொலைச் சட்டம், ஹிண்ட் மார்ஷ் தீவுப் பால சர்ச்சையில் பழங்குடியின சமூகத்தின் உரிமைகள், மற்றும் ஒரே பாலின தம்பதிகளுக்கு ஓய்வுபெறுவதற்கான உரிமை ஆகியவற்றிற்கு ஆதரவாகப் பேசினார்.

அடுத்த வந்த ஆண்டுகளில், 2007 இல் ரூட் அரசாங்கத்தின் தேர்தல் சட்டத்தை நிறைவேற்றும் வரை அவர் மூன்று முறை ஒரே பாலின தம்பதிகளுக்கு ஓய்வுபெறுவதற்கான உரிமை ஆகியவற்றிற்கு முயற்சி செய்தார். அத்துடன் ஒரே பாலின திருமணத் திற்கான பிரச்சாரத்திலும் தனது கவனத்தை செலுத்தினார்.

2019 தேர்தலில் தொழிற்கட்சியின் எதிர்பாராத தோல்வியைத் தொடர்ந்து பில்ஷார்ட்டன்18 மே 2019 அன்று தொழிலாளர் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். பின்னர் மே 30 அன்று, அல்பானீஸ் போட்டியின்றி தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

### 2022 பாராளுமன்ற தேர்தல்:

இந்த நூற்றாண்டின் கொடிய கோவிட் தொற்றுநோய் மற்றும் பேரழிவு தரும் இயற்கைப் பேரழிவுகளின் பின்னணியில், 2022 பாராளுமன்ற தேர்தல் பல்வேறு காரணங்களுக்காக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகளில் தொழிற்கட்சி முதல்முறையாக அரசாங்கத்தை வென்றுள்ளது.

அந்தோனி அல்பானீஸ் ஆஸ்திரேலியாவின் 31வது பிரதம மந்திரியாக தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொழிற்கட்சியிலிருந்து அந்தப் பதவியை வகிக்கும் 12வது பிரதமர் அந்தோனி அல்பானீஸ் ஆவார்.

கடந்த பல வருடங்களாக அவுஸ்திரேலியாவில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் நிலை தொடர்பில் இரண்டு பிரதான கட்சிகளும் மௌனம் சாதித்து வந்ததும், புகலிடக் கோரிக்கையாளர்களின் எதிர்காலம் குறித்தும் பலரும் அச்சம் வெளியிட்டிருந்தனர். இரு பிரதான கட்சிகளும் அகதிகள் தொடர்பில் கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்த கொள்கைகளையும் அறிவிக்காத பின்னணியில் நியூ சிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ குடியமர்த்தப்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதபட்சத்தில் அவர்களின் எதிர்காலம் என்னவாக இருக்கும் என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. ஆனால் தற்போது தொழிற் கட்சி ஆட்சியை வென்று இருப்பது பல்லாண்டுகளாய் நிரந்தர வதிவுரிமையின்றி அல்லலுறும் பல்லாயிரம் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் குடும்பங்களுக்கு ஓர் மாற்றத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கை தற்போது எழுந்துள்ளது.

# தோப்பாக்கப்படும் தனிமரம் எஜமானுடன் நின்றுபிடிக்குமா?

**- பனங்காட்டான்**

எவரும் எவ்வேளையிலும் எதிர்பார்த்திராத அரசியல் கலாசாரமும் அரசியல் சூழலும் முன்னறிவிப்பின்றி பல அரசியல் நகர்வுகளை இலங்கையில் இப்பொழுது ஏற்படுத்தி வருகிறது. சாதாரண பொதுமக்கள் மட்டுமன்றி, சர்வதேச நிறுவனங்கள் - மனித உரிமை அமைப்புகள் - நிதி நிறுவனங்கள் உட்பட மேற்கத்தைய நாடுகள் பலவும் இந்த நகர்வுகளை மிகக் கூர்மையாக அவதானித்து வருகின்றன.

இலங்கைக்குத் தேவையான நிதி வழங்குவது இந்த அவதானிப்பில் முக்கிய இடத்தை வகிக்கிறது. ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரை மட்டும் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருடன், அதிகூடிய பெரும்பான்மையில் ஆட்சியைக் கைப்பற்றிய பொதுஜன பெரமுன இணைந்து - ஒரு வகையான கலப்பு அரசாட்சி ஏற்படுத்தப்பட்டிருப்பதே இதற்கான காரணம்.

முப்பது வருட ராணுவ அனுபவம் கொண்ட கோட்டாபய ஜனாதிபதியாகவும், நாற்பத்தைந்து வருட அரசியல் அனுபவம் கொண்ட ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் - அரசியல் ரீதியாக இரு வேறு கட்சிகளைக் கொண்டவர்கள் இணைந்து ஆட்சிக்குத் தலைமை தாங்குவது விசித்திரமானது.

மகிந்தவை பிரதமர் பதவியிலிருந்து நீக்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே ரணிலுடன் கோட்டாபய சந்திப்பு நடத்தி அவரின் சம்மதத்தைப் பெற்ற விடயம் மகிந்த தரப்பினருக்கு காலந்தாழ்த்தியே தெரியவரும் அளவுக்கு அத்தனை விடயங்களும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

இந்த மாதம் 6ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மகிந்தவை பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறு நேரடியாக கோட்டாபய கேட்டிருந்தார். ஏதோ விதமாக இவ்விடயம் கசிந்து ஏழாம் திகதியன்று ஊடங்களில் வெளியாயிற்று. செய்தி வெளிவந்த வேகத்தைவிட அதற்கான மறுப்பு மகிந்த தரப்பிலிருந்து அதிவேகமாக வந்தது.

அப்படியொரு அமைச்சரவைக் கூட்டம் 6ம் திகதி நடைபெறவில்லையென்றும், அது அமைச்சர்களுடனான சந்திப்பே என்றும் சுட்டிக்காட்டிய மகிந்த, தம்மைப் பதவி விலகுமாறு கோட்டாபய கேட்கவில்லையென்றும் கூறினார். இதனை உறுதிப்படுத்தும் வகையில் அவரது செயலாளர் அறிக்கையொன்றையும் வெளியிட்டார். இது போதாதென்று தனது அண்ணனை பதவி விலகுமாறு தாம் கேட்க மாட்டேன் என்று கோதபாய சொன்னதாகவும் சகோதர பாசம் ததும்பும் செய்தியும் வெளிவந்தது.

இது இடம்பெற்று மூன்று நாட்களின் பின்னர் - 9ம் திகதி மகிந்த தமது பிரதமர் பதவியிலிருந்து விலகும் கடிதத்தை கோட்டாபயவுக்கு அனுப்பினார். இக்கடிதம் ஏதோ காரணத்துக்காக திகதியிடப்படவில்லை என்பது இப்போது பகிரங்கமாகியுள்ளது.

இக்கடிதத்தின் முக்கிய பந்தி பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

Hence, according to your request made at the special cabinet meeting on May 6, 2022, I am immediately resigning from the post of prime minister.... *(2022 மே மாதம் 6ம் திகதி இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் நீங்கள் கேட்டுக் கொண்டவாறு, நான் உடனடியாக எனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்கிறேன்....)*

இக்கடிதத்தின் பிரகாரம் மே மாதம் 6ம் திகதி அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது என்பதையும், அக்கூட்டத்தில் வைத்து தம்மை பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு கோட்டாபய கேட்டுக் கொண்டார் என்பதையும் சந்தேகத்துக்கிடமின்றி மகிந்த தமது கடிதத்தின் வாயிலாக உறுதிப்படுத்தியுள்ளார். இக்கூற்று அவர் முன்னர் தெரிவித்த மறுப்புக்கு மறுப்பானது.



பொய் கூறுபவர்களுக்கு ஞாபகசக்தி இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். நிகழ்கால குழப்பம் காரணமாகவோ என்னவோ தாம் முன்னர் கூறிய பொய்யை ஞாபகசக்தியின்மையால் மறந்து அரசியல் பித்தலாட்டம் செய்திருக்கிறார் மகிந்த.

**எல்லாவற்றுக்கும் விட்டுக்கொடுத்து (வெளித்தோற்றத்தில்) தோப்பாக்கப்படும் தனிமரம் எவ்வளவு காலத்துக்கு அதன் எஜமானின் பொய் நிழலில் நின்று பிடிக்கும். ரணில் இன்னொரு மகிந்த ஆக்கப்படுவாரா? அல்லது கோட்டா அமைதியாக வீடேகுவாரா?**

இந்தப் பின்னணியில்தான், பதவி துறப்பதற்கு முன்னர் அலரி மாளிகையில் தமது ஆதரவாளர்களை சந்தித்தபோது இவரது நெருங்கிய சகாவான முன்னாள் அமைச்சர் ஜோன் பெர்னாண்டோவின் வழிநடத்தலில், போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கு தமது குரக்கன் சால்வையைத் தூக்கிக் காட்டி ஆமோதித்தார். நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, கோட்டாபயவை மக்கள் விரட்டி அடித்தாலும் கூட பரவாயில்லை என்ற வன்மத்துக்கு மகிந்த ஆளாகியிருந்தார் என்பதை பதவி துறப்பு நேர செயற்பாடு நிரூபிக்கிறது.

ராஜபக்ச குடும்பத்தவர் எவரும் இப்போது அமைச்சர்களாக இல்லை. இயலுமானவரை அவர்களை உள்வாங்காது வெளியில் வைத்திருக்கும் நிலைக்கு கோதபாய தள்ளப்பட்டிருக்கிறார். இதன் காரணமாகவே நாடாளுமன்ற நிர்வாகம் - நாடாளுமன்ற அதிகாரம் - அமைச்சர்கள் நியமனம் என்பவற்றை பிரதமரிடம் ஒப்படைத்துவிட்டதாக அறிவித்து, காரியங்களை தமது ஒத்திசைவுடன் நிறைவேற்றக் கூடியதாக மேற்கொண்டு வருகிறார்.

இதனைப் புரிந்து கொண்ட ராஜபக்ச சகோதரர்களின் மூத்தவரான சமல் ராஜபக்ச 9ம் திகதி வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் சுட்டிக் காட்டிய ஒரு விடயம் யதார்த்தமானது. ஆனால் காலம் சென்றது.

ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிந்ததும் (2015) மகிந்த ராஜபக்ச அரசியலிலிருந்து ஓய்வு பெற்றிருந்தால், இப் போது ஏற்பட்ட பிரச்சனைகள் ஏற்பட்டிருக்காது என்பதே சமல் ராஜபக்சவின் கூற்று. இதில் முற்றுமுழுதாக உண்மை இருக்கிறது.

தங்காலையிலுள்ள தங்களின் பூர்வீக இல்லம் தீக்கிரையாக்கப்பட்டது, தந்தையார் டி.ஏ.ராஜபக்சவின் உருவச்சிலை அடித்து நொருக்கப்பட்டது, அவரது பெயரிலான நூதனசாலை சேதமாக்கப்பட்டது மட்டுமன்றி தமது இல்லமும் தீ வைக்கப்பட்டதன் பின்னரே மகிந்த விட்ட தவறை இவர் நினைத்துப் பார்க்க முடிந்திருக்கிறது.

வயதாலும், அனுபவத்தாலும், குடும்பத்தின் மூத்தவர் என்பதாலும் மகிந்தவுக்கு ஜனாதிபதி பதவிக்கால முடிவிலேயே தகுந்த ஆலோசனை வழங்கி நெறிப்படுத்தி அவரை வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டிய சமல் ராஜபக்ச, இப்போது நாட்டு மக்கள் துரத்தி அனுப்பிய பின்னர் தாம் விட்ட தவறை ஏற்றுக்கொள்ளாது கூறுகின்ற ஆலோசனை காலத்துக்கு உதவாதது. இது கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் போன்றது.

ஜனாதிபதிப் பதவியை மூன்றாம் தடவையும் பெறுவதற்கு வழிவகுக்கும் பதினெட்டாவது அரசியல் திருத்தம் மகிந்தாவால் கொண்டு வரப்பட்ட போது அதனை ஆதரித்தவர் சமல் ராஜபக்ச. மகிந்தவின் அரசில் பல அமைச்சர் பதவி வகித்தவர். தமது மகனுக்கும் அரசியல் பாதையை ஏற்படுத்தி அதனூடாக அமைச்சர் பதவியை பெற்றுக் கொடுத்தவர். 2000ம் ஆண்டுத் தேர்தலில் மகிந்த தலைமையில் போட்டியிட்டு அவரை பிரதமர் கதிரைக்குக் கொண்டு வந்ததில் இவருக்கும் பெரும் பங்குண்டு. மொத்தத்தில் மகிந்தவின் அத்தனை செயற்பாடுகளுக்கும் ஆதரவாளராக இருந்துவிட்டு, இப்போது மகிந்த விட்ட தவறை, தவறு என்று சுட்டிக்காட்டும்போது அதில் தமக்குள்ள பங்கையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

ஒரு வார்த்தையில் சொல்வதானால் அரசியலில் அனைத்துச் சுபீட்சங்களையும் அனுபவித்துவிட்டு இப்போது ஒருவரைப் பார்த்து விரல் நீட்டுவதால் போராடும் மக்கள் பார்வையிலிருந்து தம்மைத் தப்ப வைக்கும் முயற்சியை சமல் மேற்கொள்கிறார். 2015ம் ஆண்டில் மகிந்த செய்யத் தவறியதை ஏழாண்டுகளின் பின்னர் புலனாய்வு செய்வதென்பது, ராஜபக்ச குடும்பத்தின் இன்றைய தோல்வியில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள இவர் மேற்கொள்ளும் தற்காப்பு முயற்சி.

இன்றைய அரசியல் பொருளாதார சீர்கேடுகளுக்கும், நெருக்கடிகளுக்கும் கோட்டா, மகிந்த, பசில் மட்டுமன்றி மூத்தவரான சமல் ராஜபக்ச உட்பட அந்தக் குடும்பத்தின் அனைவருமே காரணிகள். அதனால்தான் கூண்டோடு ராஜபக்சக்கள் களையப்பட வேண்டுமென்ற கோசத்துடன் மக்கள் வீதிகளில் இறங்க நேர்ந்தது. இன்றும் அதுவே அவர்கள் குரலாக ஒலிக்கிறது.

அரசியல் யாப்பைக் காரணம் காட்டி கோட்டாபய தப்பி இருக்கிறார். ஜனாதிபதி ஒருவர் பதவி நீக்கப்பட்டால் அல்லது ஏதாவது காரணத்தினால் பதவி விலகினால் இடைத்தேர்தல் நடத்த முடியாது. ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவர முடியாது. இப்பீச்மன்ற் எனப்படும் குற்றவியல் பிரேரணை மட்டும் கொண்டுவர முடியும். ஆனால், அதற்கான நடைமுறை நீட்சியானது. பெரும்பான்மையுடன் இருக்கும் நாடாளுமன்றத்தில் இவ்வாறான பிரேரணை சாத்தியப்படாது.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது அவர் மீது லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்க ஆகிய அமைச்சர்கள் குற்றவியல் பிரேரணையை கொண்டுவர எடுத்த முயற்சி புஸ்வாணமானதையும், அதன் பிரதிபலனாக இரு அமைச்சர்களும் பதவி இறக்கப்பட்டதும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாதது.

தமக்கு விரும்பிய ஒருவரைப் பிரதமராக்கி - அவருக்கு ஒற்றை ஆதரவுகூட இல்லாத நிலையில் அதற்கான ஆதரவுத் தளத்தையும் நாடாளுமன்றில் உருவாக்கி, தம்மை அரசியல் ரீதியாக எதிர்த்தவர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கி, ராஜபக்ச குடும்பத்தினரை மட்டுமன்றி சர்வதேசத்தையும் தம் பக்கத்துக்கு பார்வையை திருப்பியுள்ளார் கோட்டாபய . ஒருவகையில் சொல்வதானால் இந்த ஆட்சி அமைப்பு ஒரு பொறிக்கிடங்கு.

நாட்டின் மாப்பிள்ளையாக (ஜனாதிபதிப் பதவி) வரவேண்டுமென்று ஆசை கொண்ட ரணிலுக்கு அது கிடைக்கவில்லை. பல தடவை மாப்பிள்ளைத் தோழனாகவே (பிரதமர் பதவி) வர முடிந்துள்ளது. இதற்கு முன்னர் மூன்று ஜனாதிபதிகளின் கீழ் (டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன) பிரதமர் பதவி வகித்துள்ளார்.


2001ம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தவேளை நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றதால் ரணில் பிரதமரானார். ஆனால் 2004ம் ஆண்டு சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்ததால் ரணிலின் பதவியும் பறிபோனது. 2015ல் உருவான நல்லாட்சியில் மகிந்தவின் பிரதமர் பதவியை 52 நாட்களுக்கு மைத்திரி காலி செய்தார்.


விரும்பும் எந்த வேளையிலும் காரணம் கூறாமலே பிரதமரை பதவி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்பதை நன்கு தெரிந்து கொண்டே இப்பதவியை ரணில் ஏற்றுள்ளார். கோட்டாபய சம்மதப்படாத பல காரியங்களை (உதாரணம்: முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்) ஷ வெற்றி;கரமாக செயற்படுத்துகிறார்.

எல்லாவற்றுக்கும் விட்டுக் கொடுத்து (வெளித்தோற்றத்தில்) தோப்பாக்கப்படும் தனிமரம் எவ்வளவு காலத்துக்கு அதன் எஜமானின் பொய் நிழலில் நின்று பிடிக்கும். ரணில் இன்னொரு மகிந்த ஆக்கப்படுவாரா? அல்லது கோட்டா அமைதியாக வீடேகுவாரா?


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1) 2) 3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)



39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

01) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ....................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ....................

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

....................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ....................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ....................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ....................

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

....................

(1 புள்ளி)

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

05) **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

37. 1 38. 2 39. 1 40. 2

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

### கல்வி tv CHANNEL-1

**23.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**23.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டு. எரிபொருள் நிலையங்களில் மோதல்களைதவிர்க்கஇராணுவம்!

மட்டக்களப்பு, மே 23

**மட்டக்களப்பு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அடிக்கடி ஏற்படும் முரண்பாடுகள் - மோதல்களை தவிர்க்க இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.**

நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. மட்டக்களப்பிலும் இதன் பாதிப்பு அதிகமாக உள்ளது. இந்நிலையில், கடந்த இரு நாட்களாக மட்டக்களப்பில் எரிபொருள் வழங்கப்படும் நிலையில் நிரப்பு நிலையங்களில் கூடுவோரால் அடிக்கடி முரண்பாடுகள், சண்டைகள் ஏற்படுகின்றன.

நீண்ட வரிசைகளில் காத்திருந்து மக்கள் எரிபொருட்களை பெற்றுச் செல்கின்றனர். ஆனால், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தமக்கு தெரிந்தவர்களுக்கு வரிசையில் காத்திருக்காமலும், அதிகளவு



பெற்றோலும் வழங்கப்படுகின்றது எனக் கூறியே இந்த மோதல்கள் இடம்பெறுகின்றன என்றும் அறிய வருகின்றது.

எனவே, இதனைக் கட்டுப்படுத்த நேற்று ஞாயிற்றுக்கிழமை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவத்தினர் பாதுகாப்பு பணிகளை பொறுப்பேற்றனர். (ஐ)



## மட்டு. பாண்டிருப்பில் சம்பந்தர் குரு பூசை

மட்டக்களப்பு, மே 23

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாண்டிருப்பு ஸ்ரீமுத்துமாரியம்மன் இந்து இளைஞர் மன்றம் இணைந்து நடத்திய திருஞானசம்பந்தர் குருபூசை தினம் - இந்து எழுச்சிபேரணி ஆகியன நேற்று பாண்டிருப்பு கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் க.மேனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருஞானசம்பந்தர் திருவுருவச் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

இதன் போது கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், கலாசாரஉத்தியோகத்தர்கள், ஆலயங்களின் குருமார்கள், இந்து ஆலயங்களின் நிர்வாகசபை உறுப்பினர்கள், இந்து இளைஞர்மன்ற உறுப்பினர்கள் பொது மக்கள் தேவாரங்கள் இசைத்தபடி, நந்திக் கொடிகளை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர்.

தொடர்ந்து சம்பந்தர் திருவுருவச்சிலைக்கு விசேட பூசைவழிபாடுகள் நடைபெற்றதுடன், திருஞானசம்பந்தர் அருளிய திருநெடுங்களத்து இடர் களைபதிகம் செய்யப்பட்டது. தொடர்ந்து, அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களின் ஆற்றுகைகள் இடம்பெற்றன. (ஐ)



## எரிவாயு விநியோகம் ஆரம்பம்; மீதி பணம் வழங்காமல் ஏமாற்று!

சாய்ந்தமருது, மே 23

நாட்டில் அண்மை நாட்களாக எரிவாயு பிரச்னை நிலவிவந்த நிலையில் நேற்றுமுதல் எரிவாயு விநியோகம் ஆரம்பமானது.

இந்நிலையில் நேற்று சாய்ந்தமருதில் எரிவாயு விநியோகம் இடம்பெற்றது. நீண்ட வரிசையில் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் எரிவாயுவை பெற்ற நிலையில், அவர்களுக்கு மீதி பணமான 30 ரூபாயை வழங்க முகவர்கள் மறுத்துள்ளனர். சில்லறை இல்லை என்று கூறியே இவ்வாறு மீதிப் பணம் வழங்காமல் ஏமாற்றப்பட்டதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

12.5 கிலோ எடைகொண்ட எரிவாயுவின் விலை 4ஆயிரத்து 970 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. 5ஆயிரம் ரூபாயை வழங்கியவர்களுக்கே இவ்வாறு மீதிப் பணம் வழங்காமல் ஏமாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மக்கள் முரண்பட்டதால் எரிவாயு விநியோகிக்கப்பட்ட இடத்தில் அமைதியின்மை ஏற்பட்டதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

## ஏறாவூர் வன்முறை சம்பவம் 15 பேருக்கு விளக்க மறியல்!

ஏறாவூர், மே 23

ஏறாவூரில் கடந்த 9ஆம் திகதி இரவு இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 16 வயது சிறுவன் உட்பட 15 பேரை, விளக்கமறியல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மறியலில் வைக்கப்பட்ட 15 பேரும், ஹாபீஸ் நஸீர் அஹமட் எம்.பியின் வீடு, அவரின் உறவினரின் வீடு, ஹோட்டல், கடை தீ வைப்பு மற்றும் 3ஆடைத்தொழிற்சாலைளை சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த வன்முறை சம்பவம் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசணைக்கு அமைய, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வந்த விசாரணையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில், ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன், இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் க.பொ.த சாதரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்.

இந்நிலையில், அவரை மறியலில் இருந்தவாறே பரீட்சை நிலையத்துக்கு சென்று பரீட்சை எழுத அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய பலர் தலைமறைவான நிலையில், அவர்களை தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## கொக்கட்டிச்சோலையில் யானை தாக்கி ஒருவர் பலி!

மட்டக்களப்பு, மே 23

மேயச் சென்ற மாடுகளை பார்க்க சென்ற ஒருவர் யானையின் தாக்குதலில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை - பன்சேனை அடைச்சல்குளத்துக்கு அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், பன்சேனை பகுதியைச் சேர்ந்த வடிவேல் குணராசா (வயது 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இவர், நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் தனது வீட்டில் இருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள அடைச்சல் குளப்பகுதிக்கு மேயச் சென்ற மாடுகளை பார்ப்பதற்காக சென்ற நிலையிலேயே யானையின் தாக்குதலில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## அஹிம்சை சமூகத்தை வேண்டி மட்டக்களப்பில் நடைபவனி!

மட்டக்களப்பு, மே 23

வன்முறையற்ற அஹிம்சை ரீதியான சமூகத்தை உருவாக்க - பிரார்த்தித்து நடைபவனி மட்டக்களப்பில் 10ஆவது நாளாகவும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு, புளியடிக் குடா செபஸ்தியார் தேவாலயம் அருகே ஆரம்பித்த இந்தப் பிரார்த்தனை நடைபவனி மட்டக்களப்பு நகர மத்தியில் உள்ள காந்தி பூங்காவை நேற்றுமுன்தினம் சென்றடைந்தது.

இதன்போது, பங்கேற்ற பலர், பல்வேறு அம்ச வேண்டுகோள்கள் அடங்கிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளை, காந்தி அடிகளின் சிலை அமைந்துள்ள வளாகத்தில் காட்சிப்படுத்தியதுடன், சுடரேற்றி சில நிமிடங்கள் அமைதியான முறையில் பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருந்தனர்.

"அமைதிக்காக நீதிக்காக நாங்கள் நடக்கின்றோம்", "நம் அனைவருக்கும் பொருளாதார பாதுகாப்பு அத்தியாவசியமாகும்", "நம்பகமான திடமான அரசாங்கம் எமது உரிமை", "பசியின்றி, பிணியின்றி, கல்வி, சுகாதாரம் என்பன அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிம்மதியான வாழ்வே எம் அனைவருக்கும் தேவை" மற்றும் "வாழ்வின் அடிப்படைத் தேவைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில், எமது நாட்டை மீட்டெடுக்க அமைதியாக போராட வெளிவந்துள்ளோம்" போன்ற பல்வேறுபட்ட வாசகங்கள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டன. (ஐ)

# வாழைச்சேனையில் திருடப்பட்ட லொறி கம்பஹாவில் மீட்கப்பட்டது

வாழைச்சேனை, மே 23

வாழைச்சேனை கூட்டுறவு சங்க வாகன தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் களவாடப்பட்ட லொறி கம்பஹாவில் மீட்கப்பட்டது.

கம்பஹாவின் கடுவலை பிரதேசத்தில் வாகன திருத்தகம் ஒன்றிலிருந்தே இந்த லொறி மீட்கப்பட்டது. அத்துடன், அந்த வாகன திருத்தகத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிறிமா முகவர் நிலையம் ஒன்றுக்கு சொந்தமான லொறியை, வழமைபோல கடந்த 9ஆம் திகதி இரவு கூட்டுறவு சங்க வாகன தரிப்பிடத்தில் சாரதி நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார்.

மறுநாள் காலை வழமை போல வாகன தரிப்பிடத்துக்கு சாரதி சென்றபோது அங்கு லொறி திருட்டுப் போயிருந்தது. இது குறித்து அவர் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸாரின் விசாரணையில் விசாரணையில், வாகன தரிப்பிட காவலாளி இரவு கடமையை காலை 6 மணிக்கு முடித்துக் கொண்டு வீடு சென்ற நிலையில், பகல் காவலாளி காலை 7 மணிக்கு வந்து கடமையை ஏற்றுள்ளார். இந்த ஒரு மணி நேர இடைவெளியிலேயே லொறி திருடப்பட்டது.

இந்த லொறியை திருடியவர் அதனை மாற்றியமைப்பதற்காக கம்பஹாவிலுள்ள வாகன திருத்தகத்தில் விட்டுச் சென்றுள்ளார்.

இந்நிலையில், பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவரைத் தாம் தேடி வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மீட்கப்பட்ட லொறி தற்போது வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சுற்றுலா விமானம் விபத்து; பிரான்ஸில் ஐவர் மரணம்!



பாரிஸ், மே 23

பிரான்ஸில் சிறிய ரக சுற்றுலா விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட ஐவர் உயிரிழந்தனர்.

லியோன், தென் கிழக்கு பிரான்ஸில் உள்ள கிரெனோபில் அருகே உள்ள வெர்செளட் விமான நிலையத்தில் இருந்து நேற்றுமுன் தினம் இந்த சுற்றுலா விமானம் புறப்பட்டது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானது. விபத்தை நேரில் பார்த்தவர்கள் தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த சுமார் 60 தீயணைப்பு வீரர்கள் விரைவாக தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது, விமானத்தின் சிதைவுகளுக்கு இடையே 4 பெரியவர்கள் மற்றும் ஒரு குழந்தையின் உடல்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த விபத்து எப்படி நடந்தது என்பது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

# புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் வல்லரசாக ஆஸியை மாற்றுவேன்!

### புதிய பிரதமர் அன்ரனி அல்பானீஸ் உறுதி




**சிட்னி, மே 23**

**காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அவுஸ்திரேலியாவின் கொள்கையில் பெரும் மாற்றங்கள் செய்யப்படும். நாட்டை புதிய திசை நோக்கி நகர்த்துவேன் என்று தேர்தலில் வென்று புதிய பிரதமராக பொறுப்பேற்கவுள்ள அன்ரனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.**

சனிக்கிழமையன்று நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற அன்ரனி அல்பானீஸ், தனது ஆட்சிக் காலத்தில் அவுஸ்திரேலியா புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வல்லரசாக மாறும் - என்றார்.

இன்று திங்கட்கிழமை பிரதமராக பதவியேற்க உள்ள தொழிலாளர் கட்சித் தலைவர் அல்பானீஸ் 151 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கத் தேவையான குறைந்தது 76 இடங்களைப் பெறுவாரா? என்பது இன்னும் உறுதியாக வில்லை. 72 தொகுதிகளில் அன்ரனி அல்பானீஸ் தலைமை யிலான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஏறக்குறைய மூன்று மில்லியன் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு வருவதால் இறுதி முடிவுகள் முழுமையாக வெளியாக இன்னும் சில நாட்கள் செல்லலாம். இந்நிலையில் பெரும்பான்மையின்றி தொங்கு பாராளுமன்றம் அமைந்தால் காலநிலை மாற்றம் குறித்த தீவிர நடவடிக்கை கோரி போராடி வரும் பசுமைக் கட்சியினர் மற்றும் சுயேச்சைகள் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளை வடிவமைப்பதில் அதிக செல்வாக்கு செலுத்த முடியும் எனக் கருதப்படுகிறது.

இவ்வாறான நிலையிலேயே காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அவுஸ்திரேலியாவின் கொள்கையில் பெரும் மாற்றங்கள் செய்யப்படும் என புதிய பிரதமர் கூறியுள்ளார். (ஐ)

## கேன்ஸ் திரைப்பட விருது விழாவில் அரைநிர்வாணமாக போராடிய பெண்!



பாரிஸ், மே 23

பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் திரைப்பட விழாவில் அரை குறை ஆடையுடன் வந்த பெண் போராட்டக்காரர் ஒருவர் உடலில் உக்ரைன் கொடியின் வண்ணம் தீட்டி முழக்கமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

உக்ரைன் நாட்டின் சில பகுதிகளை ரஷ்ய படைகள் ஆக்கிரமித்தபோது பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே அந்தப் பெண் அரை நிர்வாண கோலத்தில் சிவப்பு கம்பளத்தில் ஓடினார்.

"எங்களை வன்புணர்வதை நிறுத்துங்கள்", என்ற கோஷத்துடன் தனது ஆடையைக் கழற்றி வீசிய அவர் அரை நிர்வாணமாக நின்றார். அத்துடன், அவர் உக்ரைன் கொடியை தனது உடலில் வரைந்திருந்தார். அதில் "எங்களை வன்புணர்வதை நிறுத்து" என்ற வார்த்தைகள் எழுதபட்டு இருந்தன.

உடனடியாக அதிகாரிகள் அவரை சூழ்ந்து ஆடையைப் போர்த்தி அங்கிருந்து அழைத்துச் சென்றனர். இந்தச் சம்பவம் பலரின் கவனத்தை உலகம் முழுவதுமிருந்து ஈர்த்துள்ளது. (ஐ)

## குரங்கு அம்மையை உலகளவில் கண்காணிப்பதற்கு நடவடிக்கை!

### உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு

ஜெனிவா, மே 23

குரங்கு அம்மை தொற்று நோய் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை உலகெங்கும் விரிவுபடுத்துவதாகத் தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, பல்வேறு நாடுகளில் மேலும் அதிகளவான மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டு அடையாளம் காணப்படலாம் எனவும் எச்சரித்துள்ளது.

சனிக்கிழமை நிலவரப்படி, 12 நாடுகளில் 92 பேர் குரங்கு அம்மை தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன், 28 சந்தேகத்திற்கிடமான குரங்கம்மை தொற்று நோயாளர்கள் அவதானிக்கப்பட்டு கண்காணிக்கப் படுகின்றனர்.

குரங்கு அம்மை நோயாளர் தொகை தினசரி அதிகரித்து வரும் நிலையில் இந்த நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது? என்பது குறித்த கூடுதல் வழிகாட்டுதல்களையும் பரிந்துரைகளையும் எதிர்வரும் நாட்களில் வழங்கவுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுவரை அவதானிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இது ஒரு தொற்று நோயாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. நெருங்கிய தொடர்புகள் மூலம் இந்த நோய் மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவுகிறது.

இந்த நோயால் ஏற்படும் பாதிப்புக்கள் இலேசானவையாகவே உள்ளன. பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தல் மற்றும் உரிய மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்துவதன் மூலம் இதனை எளிதில் கட்டுப்படுத்த முடியும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.(ஐ)

## உலகிலேயே விலையுயர்ந்த கார் ரூ. 5,076 கோடிக்கு ஏலம் போனது!



நியூயோர்க், மே 23

உலகிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த காராக மெர்சிடஸ் பென்ஸ் 300 எஸ். எல். ஆர். வகை கருதப்படுகிறது. 1955 ஆம் ஆண்டில் வெளிவந்த இந்த பந்தயக் கார் சமீபத்தில் நடைபெற்ற ஏலத்தில் 14. 30 கோடி டொலருக்கு (நம் நாட்டு மதிப்பில் சுமார் 5ஆயிரத்து 76 கோடி ரூபாய்க்கு) ஏலம் போனது.

பழைய கார்களில் மிக அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்ட காராக இது கருதப்படுகிறது.

1955ஆம் ஆண்டில் மெர்சிடஸ் பென்ஸ் நிறுவனத்தின் பந்தயப் பிரிவு உருவாக்கிய இரண்டு கார்களில் இது ஒன்றாகும். தலைமைப் பொறியியலாளர் ருடோல்ப் உஹ்லென்ஹாட் என்பவரின் தலைமையிலான குழுவால் இது வடிவமைக்கப்பட்டது.

300 எஸ். எல். ஆர். வகை காரான இது இரண்டு முறை உலக சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளது. ஜூவான் மனுவல் பான்ஜியோ என்பவர் இந்தக் காரை ஓட்டி பட்டம் வென்றுள்ளார். மிகவும் திறன் வாய்ந்த 3 லீற்றர் என்ஜினைக் கொண் டது. அந்த காலகட்டத்தில் மணிக்கு 289.68 கி.மீ. வேகத்தில் விரைந்த இந்தக் கார்தான் அதி விரைவு காராக இருந்தது.

கனடாவில் உள்ள பழைய கார்களை ஏலம் விடும் ஆர். எம். சோத்பி நிறுவனம் மே 5ஆம் திகதி இந்தக் காரை மெர்சிடஸ் பென்ஸ் ஸ்டட் கார்ட் அருங்காட்சியகத்தில் ஏலம் விட்டது. இந்த காரை ஏலம் விட்டதன் மூலம் பெறப்பட்ட தொகை மெர்சிடஸ் பென்ஸ் நிதியத்துக்கு சென்று சேரும். இந்த நிதியம் மூலம் கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளுக்கு உதவி செய்யப்படுகிறது.

இந்தக் காரை ஏலம் எடுத்தவர் முக்கியமான நாள்களில் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். (ஐ)

## இராஜதந்திர நடவடிக்கையால் மட்டுமே போரை நிறுத்தலாம்!

### உக்ரைன் ஜனாதிபதி சொல்கிறார்

கீவ், மே 23

உக்ரைன்மீது ரஷ்யா முன்னெடுத்துள்ள போரை இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் மட்டுமே முடிவுக்குக் கொண்டு வர முடியும் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

தேசிய தொலைக்காட்சியில் பேசிய அவர், போர்க் களத்தில் ரஷ்யாவுக்கு எதிராக தனது நாடு வெற்றி பெற முடியும் என்பதில் உறுதியாக உள்ளேன். எவ்வாறாயினும் இராஜதந்திர ரீதியிலான பேச்சுகள் மூலமே போரை முடிவுக்கு வர முடியும் - என்றார்.

இதனிடையே, லுஹான்ஸ்க் பகுதி முழுவதையும் கைப்பற்றுவதற்கான முயற்சிகளை ரஷ்யப் படைகள் முடுக்கிவிட்ட நிலையில், செவரோடோனெட்ஸ்க் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

தெற்கு துறைமுக நகரமான மரியூபோலில் நடந்த சண்டையின் முடிவு ரஷ்யத் துருப்புக்களை வேறு இடங்களில் மீண்டும் நிலைநிறுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. கிழக்கில் அவர்களின் தாக்குதலை தீவிரப்படுத்தவும் இதன் மூலம் வழி ஏற்பட்டுள்ளது.

செவரோ டோனெட்ஸ்க் பகுதிகளை ரஷ்யப் படைகள் அழித்து வருகின்றன என அப்பிராந்திய ஆளுநர் சேர்கி ஹைடை தெரிவித்துள்ளார். (ஐ)



# தென்னாபிரிக்காவுடனான தொடர் இந்திய அணியில் தினேஷ் கார்த்திக்

புதுடில்லி, மே 23

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது - 20 கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது. இந்தத் தொடரில் தினேஷ் கார்த்திக்குக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 9ஆம் திகதி இந்தியா - தென்னாபிரிக்கா இடையேயான இருபது - 20 போட்டிகள் தொடங்குகின்றன.

இந்நிலையில், இந்த போட்டியில் பங்கேற்கும் 18 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டது.

இந்தத் தொடரில் கேப்டன் ரோகித் சர்மா, விராட் கோலி, பும்ரா ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இதனால், அணியின் தற்காலிக தலைவராக கே. எல். ராகுலும், உபதலைவராக ரிஷப் பந்தும் செயல்பாடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ருதுராஜ் கெய்க்வாட், இஷான் கிஷன், தீபக் ஹூடா, ஷ்ரேயாஸ் ஐயர், தினேஷ் கார்த்திக், ஹர்திக் பாண்டியா, வெங்கடேஷ் ஐயர், சாஹல், குல்தீப் யாதவ், ரவி பிஸ்னாய், அக்சர் பட்டேல், புவனேஸ்வர்குமார், ஹர்சல் பட்டேல், அவேஷ் கான், ஆர்ஸ்தீப் சிங், உம்ரான் மாலிக் ஆகியோருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஆஸிக்கு எதிரான தொடர் இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, மே 23

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள மூவகை சர்வதேச கிரிக்கெட் தொடர்களுக்கான இலங்கை உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் அணிக்கு திமுத் கருணாரட்னவும் சர்வதேச ஒருநாள், இருபது 20 கிரிக்கெட் அணிகளுக்கு தசூன் சானககவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், நிரோஷன் திக்வெல்ல, சாமிக்க கருணாரட்ன, ரமேஷ் மெண்டிஸ், ஜெவ்றி வொண்டர்சே, ப்ரவீன் ஜயவிக்ரம ஆகியோர் மூன்று குழாம்களிலும் இடம்பெற்றுள்ளனர்.

டெஸ்ட் அணி -

திமுத் கருணாரட்ன (அணித் தலைவர்), பெத்தும் நிசங்க, காமில் மிஷார, ஓஷத பெர்னாண்டோ, குசல் மெண்டிஸ், ஏஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிரோஷன் திக்வெல்ல, தினேஷ் சந்திமால், சாமிக்க கருணாரட்ன, ரமேஷ் மெண்டிஸ், மொஹமத் ஷிராஸ், ஷிரான் பெர்னாண்டோ, டில்ஷான் மதுஷங்க, லஹிரு குமார, கசுன் ராஜித்த, விஷ்வா பெர்னாண்டோ, அசித்த பெர்னாண்டோ, ஜெவ்றி வெண்டர்சே, லக்ஷித்த ரசஞ்சன, ப்ரவீன் ஜயவிக்ரம, லசித் எம்புல்தெனிய, சுமிந்த லக்ஷான்.

ஒருநாள் அணி - தனுஷ்க குணதிலக்க, பெத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், சரித் அசலன்க, பானுக்க ராஜபக்ஷ, தனஞ்சய டி சில்வா, தசூன் சானக (தலைவர்), அஷேன் பண்டார, தினேஷ் சந்திமால், நிரோஷன் திக்வெல்ல, ஜனித் லியனகே, துனித் வெல்லாலகே, தனஞ்சய லக்ஷான், சஹான் ஆராச்சி, வனிந்து ஹசரங்க டி சில்வா, சாமிக்க கருணாரட்ன, லஹிரு மதுஷன்க, ரமேஷ் மெண்டிஸ், துஷ்மந்த சமீர, பினுர பெர்னாண்டோ, டில்ஷான் மதுஷன்க, லஹிரு குமார, கசுன் ராஜித்த, ஜெவ்றி வெண்டர்சே, மஹீஷ் தீக்ஷன, ப்ரவீன் ஜயவிக்ரம.

இருபது -20 அணி -

தனுஷ்க குணதிலக்க, பெத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், சரித் அசலன்க, பானுக ராஜபக்ஷ, தசூன் சானக (தலைவர்), அஷேன் பண்டார, நிரோஷன் திக்வெல்ல, துனித் வெல்லாலகே, தனஞ்சய லக்ஷான், சஹான் ஆராச்சிகே, வனிந்து ஹசரங்க டி சில்வா, சாமிக்க கருணாரட்ன, லஹிரு மதுஷன்க, ரமேஷ் மெண்டிஸ், துஷ்மந்த சமீர, பினுர பெர்னாண்டோ, மதீஷ பத்திரண, நுவன் துஷார, கசுன் ராஜித்த, நிப்புன் மாலிங்க, லஹிரு குமார, ஜெவ்றி வெண்டர்சே, மஹேஷ் தீக்ஷன, ப்ரவின் ஜயவிக்ரம, லக்ஷான் சந்தகன்.

# டில்லி இறுதி சுற்று கனவை கலைத்தது மும்பை அணி!



மும்பை, மே 23

நடப்பு ஐ. பி. எல். தொடரின் லீக் சுற்று போட்டிகள் இறுதிக்கட்டத்தை எட்டி வருகின்றன. நேற்று முன்தினம் டில்லி கப்பிட்டல்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் தங்களின் கடைசி லீக் போட்டியில் விளையாடின.

மும்பை ஏற்கனவே இறுதிச் சுற்றிலிருந்து வெளியேறிய நிலையில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற நேற்றைய ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்துடன் களமிறங்கியது.

ஆனால், டில்லியின் இறுதிச் சுற்றுக் கனவை முதல் சில நொடிகளில் இருந்தே மும்பை அணி கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் செய்தது. 160 ஓட்டங்கள் இலக்கை துரத்திய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தொடக்கம் கொடுத்த ரோஹித் சர்மா கைகொடுக்க தவறி 2 ஓட்டங்களில் முதல் விக்கெட்டாக நடையைக் கட்டினாலும், மற்றோர் ஆரம்ப வீரரான இஷான் கிஷன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மெதுவாக ஆரம்பித்தாலும் ஒருகட்டத்தில் அதிரடியை வெளிப்படுத்திய அவர், 35 பந்துகளில் 48 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை பறிகொடுத்தார்.

அவருக்கு பக்கபலமாக இருந்த டெவால்ட் ப்ரீவிஸ் பொறுமையாக விளையாடி 37 ஓட்டங்கள் சேர்த்தார். இதன்பின் வந்த திலக் வர்மா, ரிம் டேவிட் சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றனர். ரிம் டேவிட் குறைந்த நேரமே காலத்தில் இருந்தாலும், அந்த நேரத்தில் 4 சிக்ஸர்களை விளாசி வாணவேடிக்கை காண்பித்தார். அவர் 11 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுக்க, திலக் வர்மா 21 ஓட்டங்கள் சேர்த்தார்.

இருவரும் ஆட்டமிழந்த நேரத்தில் மும்பை இந்தியன்ஸ் வெற்றிக்கு கடைசி ஓர் ஓவரில் 5 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கடைசி ஓவரை வீசிய கலீல் அகமது முதல் பந்தே முறையற்ற பந்தாக வீச, அடுத்து ப்ரீ ஹிட் மூலம் பௌண்ட்ரி அடித்து அணியை வெற்றி பெற வைத்தார் ரமன்தீப் சிங். தொடரை தோல்வியுடன் தொடங்கிய மும்பை, வெற்றியுடன் முடித்துள்ளது. டில்லி அணி தரப்பில் அன்ரிச் நோர்ட்ஜே, ஷர்துல் தாகூர் தலா இரண்டு விக்கெட்கள் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் தோற்றத்தன் மூலம் இறுதிச் சுற்று வாய்ப்பை இழந்தது. 14 போட்டிகளில் விளையாடியுள்ள டில்லி 7 வெற்றிகளை பெற்றுள்ளது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் வென்றே ஆக வேணடிய கட்டாயத்தில் இருந்த அந்த அணி சிறப்பாக செயல்பட தவறியதால் தோல்வி கண்டு வெளியேறியது.

இதேநேரம் மும்பையின் வெற்றியால் நான்காவது அணியாக றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது.

முன்னதாக, வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோஹித் சர்மா பந்துவீச்சை தேர்வு செய்தார். இதன்படி, டில்லி அணிக்கு பிரித்வி ஷா, டேவிட் வோர்ணர் இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணையை 3ஆவது ஓவரில் டேனியல் சாம்ஸ் பிரித்தார். இதனால், 5 ஓட்டங்களில் டேவிட் வோர்ணர் வெளியேற, மிட்செல் மார்ஷ் களத்துக்கு வந்தார்.

வந்த வேகத்தில் பும்ரா வீசிய பந்தை அடித்தாடி பிடிகொடுத்து ஓட்டம் எதுவும் எடுக்காமல் அவுட்டாகி நடையைக் கட்டினார். பிரத்வி ஷாவும், பும்ரா வீசிய மற்றோர் ஓவரில் பிடிகொடுத்து 24 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார் . அடுத்து வந்த சர்ஃபராஸ் கானும் நிலைக்கவில்லை.

இதற்கு மேலும் விக்கெட்களை பறிகொடுத்தால் அணியின் நிலைமை மோசமாகிவிடும் என்று எண்ணி, ரிஷப் பந்தும், ரோவ்மேன் பவலும் இணைந்து மும்பை அணியின் பந்து வீச்சுகளை நாலாப்புறமும் விரட்டி அடித்தனர். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த ரிஷப் பந்தை, ராமன்தீப் சிங் விக்கெட்டாக, அவர் 39 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து, ரோவ்மேன் பவலும் 43 ஓட்டங்களில் போல்ட் முறையில் வெளியேறினார்.

அடுத்தாக களத்துக்கு வந்த ஷர்துல் தாகூர் 4 ஓட்டங்களில் வெளியேற, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்களை இழந்து டில்லி அணி 159 ஓட்டங்களை சேர்த்தது. அக்ஷர் பட்டேல் 19 ஓட்டங்களிலும், குல்தீப் யாதவ் ஓர் ஓட்டத்திலும் களத்தில் இருந்தனர்.

மும்பை அணி தரப்பில், பும்ரா 3 விக்கெட்களையும், ராமன்தீப் சிங் 2 விக்கெட்களையும், மயங்க் மார்கண்டே, டானியல் சாம்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# டெஸ்ட் அணியில் மீண்டும் புஜாரா!



புதுடில்லி, மே 23

இங்கிலாந்து அணிக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், புஜாராவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ரோஹித் சர்மா தலைமையிலான அணியில் கே.எல். ராகுல் ஷுப்மன் கில் இடம் பெற்றுள்ளனர். மேலும் விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், ஹனுமா விஹாரி, புஜாரா, ரிஷப் பந்த்,கே. எஸ். பாரத், ரவீந்திர ஜடேஜா ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் அஸ்வின், ஷர்துல் தாக்கூர், முகமது ஷமி, பும்ரா, சிராஜ், உமேஷ் யாதவ், பிரசித் கிருஷ்ணா டெஸ்ட் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

கொரோனா பரவலால் இங்கிலாந்து அணிக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் இடைநிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் நடக்கவுள்ளது. (ஐ)

# ஹர்பஜன் சிங்கை பின்தள்ளிய பும்ரா

மும்பை, மே 23

ஐ. பி. எல். நடப்பு தொடரின் 69வது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பும்ரா, முன்னாள் மும்பை வீரர் ஹர்பஜன் சிங் சாதனையை முறியடித்தார்.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில் மும்பை அணியின் நட்சத்திர வீரர் பும்ரா 3 விக்கெட்கள் எடுத்தார். மும்பை அணி வெற்றிப் பெற்றது.

இதுவரை, மும்பை இந்தியன்ஸ் அணிக்காக அதிக விக்கெட் எடுத்தவர்கள் பட்டியலில் இரண்டாம் இடமிருந்த ஹர்பஜன் சிங்கை பின்னுக்குத் தள்ளி ஜஸ்பிரித் பும்ரா இரண்டாம் இடத்தை கைப்பற்றினார். முதலிடத்தில் மலிங்க தொடர்கிறார்.

மும்பை அணிக்காக அதிக விக்கெட் எடுத்தவர்கள் பட்டியலில் லசித் மலிங்க 195 விக்கெட்கள், ஜஸ்பிரித் பும்ரா 148 விக்கெட்கள், ஹர்பஜன் சிங் 147 விக்கெட்கள், கிரன் பொலார்ட் 79 விக்கெட்கள் முன்னிலையில் உள்ளனர்.



## இன்று ஆரம்பமாகிறது ஓ. எல். பரீட்சை:
# சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பரீட்சைக்கு செல்வோருக்கு முன்னுரிமை!

கொழும்பு, மே 23

**கல்வி பொதுதர சாதாரணத்தர பரீட்சைகள் இன்று ஆரம்பமாகிறது. இந்நிலையில் பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ள 25,000 அதிகாரிகளுக்கு எரிபொருள் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கல்வி பொதுதர சாதாரணத்தர பரீட்சை கடமைகளில் ஈடுபடவுள்ள 25 ஆயிரம் அதிகாரிகளுக்கும் எரிபொருள்களை வழங்குவதில் முன்னுரிமை அளிக்குமாறு சகல தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று 9 மாகாணங்களின் ஆளுநர்களையும் தொடர்பு கொண்டு அவர்களுக்கூடாக அதிகாரிகளை ஒன்றிணைத்து, எரிபொருள் விநியோகத்தில் கல்வித் துறையைச் சேர்ந்த வர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தி செயல்படுமாறு கூறியிருந்தேன்.

அடையாள அட்டை, பரீட்சைக்கான கடிதம், மாணவர் எனில் அவரின் அனுமதி அட்டை உள்ளிட்ட ஆவணங்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு கோரியிருந்தேன்.

உதாரணத்துக்கு ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தை எடுத்துக்கொண்டால் அங்கு ஆகக் குறைந்து 10, 15 கல்வி அதிகாரிகளே வருகை தருவர். அதற்கு மேல் வரப்போவதில்லை. ஏனெனில் 1,190 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றன.

எனவே, அவ்வாறு வரும் 10, 15 அதிகாரிகளுக்கு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடிதங்களுக்கு அமைவாக முன்னுரிமை அளித்து அவர்கள் எரிபொருளை வழங்கவும்.

எரிபொருள் பிரச்னையை சகலரும் எதிர்கொண்டு இருப்பதை நாம் அறிவோம். எனினும், இந்த விடயத்தில் மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டே செயல்படுமாறே பொதுமக்களை கோருகின்றோம். இது மாணவர்களுக்கான பரீட்சை.

அதேபோன்று பிரதேச செயலாளர்களுக்கு இவ்விடயம் தொடர்பில் அறிவுறுத்தியுள்ளோம். பொலிஸ்மா அதிபர் ஊடாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் எரிபொருள்களில், பரீட்சை கடமைகளில் ஈடுபடவுள்ள தரப்பினருக்கு முன்னுரிமையளித்து எரிபொருளை விநியோகிப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சில வேளைகளில் தந்தையொருவர் தனது பிள்ளையை மோட்டார் சைக்கிளில் வைத்துக்கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வர முடியும். அவ்வாறு வருபவர்களுக்கு மனசாட்சிக்கு அமைவாக எரிபொருளை வழங்க முன்னுரிமை அளியுங்கள்.

மாணவர் சமுதாயத்தின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு செயல்படுமாறு பொது மக்களை நாம் கோருகின்றோம் - என்றார். (கே)

# பொலிஸ் மா அதிபருடன் ஜே. வி. பி. இன்று சந்திப்பு

கொழும்பு, மே 23

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழுவினர் இன்று திங்கட்கிழமை சந்திக்கவுள்ளனர்.

அண்மைய நாட்களில் மே-9ஆம் திகதி நடைபெற்ற வன்முறைகளுடன் மக்கள் விடுதலை முன்னணியினருக்கு தொடர்புகள் இருக்கின்றன என்று ஆளும் தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே இந்த சந்திப்பு நிகழவுள்ளது.

மேலும் இந்தச் சந்திப்பின் போது, கைதுசெய்யப்பட்டவர்களில் ஜே.வி.பி. யுடன் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்கள் உள்ளனவா என்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சமூக வலைத் தளங்கள் மற்றும் தனி நபர்கள் ஊடாக மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக இவ்விதமாக பரப்பப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 450 கிலோ கஞ்சாவுடன் கம்பஹாவில் ஒருவர் கைது!

கொழும்பு, மே 23

கம்பஹா, சப்புகஸ்கந்தை - கோனவெல பிரதேசத்தில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 450 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கேரள கஞ்சா அடங்கிய 250 பொதிகள் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)



# காலிமுகத்திடல் போராட்டக்காரரை இரும்பு கம்பியால் தாக்கியவர் கைது!

கொழும்பு, மே 23

கொழும்பு காலிமுகத்திடலில் கடந்த 9ஆம் திகதி ஏற்பட்ட வன்முறையின்போது, இளைஞர் ஒருவரை இரும்புக் கம்பியால் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர் ஒருவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சதா நாலக்க என்றழைக்கப்படும் 43 வயது நபரே கொழும்பு ஹோக்கந்தர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அந்த நபர் ஹோக்கந்தர பிரதேசத்தில் தனது வீட்டில் மறைந்து இருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் முன்னாள் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவரின் உறவினர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பங்கேற்றவர்கள், அமைதி வழியில் காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கே)

# இருவர் படுகொலை

கொழும்பு, மே 23

குருநாகல், பொலநறுவையில் இருவர் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

குருநாகல் பரகஹதெனிய பிரதேசத்தில் நபரொருவர் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிங்கதெனிய, பரகஹதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த நபரை வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

இதேவேளை, பொலநறுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டச்சேலை பிரதேசத்தில் நபரொருவர் மனைவியை பொல்லால் தாக்கி படுகொலை செய்தார் என்று கூறப்படுகின்றது.

31 வயது பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். சம்பவத்தில் காயமடைந்த பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் உயிரிழந்தார். சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தலைமறைவான நிலையில் அவரை பொலிஸார் தேடி வருகின்றனர். (கே)


# மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 04 - 1956



மறைவு 19 - 05 - 2022

## செல்லன் கதிரமலை (சின்னத்தம்பி)

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Marl ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லன் கதிரமலை அவர்கள் 19-05-2022 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முதலி செல்லன் சரசு தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முதலி, நாகி தம்பதிகளின் அன்பு மருமகனும்,நல்லம்மா(ஜேர்மனி) அவர்களின் அன்புக் கணவரும்,ஜெயரூபன், ஜெயரூபி, கவீபன், திலீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகுமார், டினுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷியா, நிதுஷன், நதுஷா, அக்ஷயா, ஆதிஷ் ஆகியோரின் அருமைப் பேரனும்,ராசகிளி, தியாகராஜா, தங்கமலர், நாகேஸ்வரன், வசந்தா, மோகன், சுதன், சரோசினி மற்றும் காலஞ்சென்ற தயா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கந்தசாமி, பாக்கியம், சின்னராஜா, நாகராணி, சந்திரகலா, தம்பிஜயா, காலஞ்சென்ற செல்லம்மா, செல்லமுத்து, அப்புத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

கிரியை
Wednesday, 25 May 2022 10:00 AM - 12:00 PM
BS Bestattungen Saath GmbH Dümmerweg 211, 45772 Marl, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**சிவனேஸ்வரன் சசிகுமார் - மருமகன்.**

தொடர்புகளுக்கு:
**சிவனேஸ்வரன் சசிகுமார் - மருமகன்** Mobile : +4915734674497
**ஜெயரூபன் டினுஜா - மருமகள்** Mobile : +4915735662761
**கதிரமலை ஜெயரூபன் - மகன்** Mobile : +4915739034972

# காலிமுகத்திடல் வன்முறைகள் ஜோன்ஸ்டனிடம் இன்று விசாரணை!

கொழும்பு, மே 23

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீது கடந்த 9ஆம் திகதி கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவிடம் சி.ஐ.டி. இன்று திங்கட்கிழமை விசாரணை நடத்தவுள்ளது.

இதற்காக அவரை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்த விசாரணைகளுக்காக, கடந்த மே 12 ஆம் திகதி கோட்டை நீதிமன்றால் ஜோன்ஸ்டன் வெளி நாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே ஜோன்ஸ்டனிடம் சி.ஐ.டி. இந்த விவகாரத்தில் முதன்முறையாக விசாரணை நடத்தப்படவுள்ளது.



முன்னதாக ஜோன்ஸ்டனுக்கு எதிராக, இந்த தாக்குதல் விவகாரத்தில் பாதிக் கப்பட்ட தரப்புக்காக நீதிமன்றில் முன்னிலையாகும் ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்ச குலரத்ன இந்த சம்பவத்தில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் வகிபாகம் தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி நீதிமன்றின் அவதானத்துக்கு கொண்டு வந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நெருக்கடிகளுக்கு...

மூலம் தேவையற்ற அசௌகரியங்களை தவிர்க்க முடியும் என்றும் தெரவிக்கப்பட்டது.

இன்று ஆரம்பமாகும் பரீட்சை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வரை நடைபெறும்.

இம்முறை பரீட்சைக்கு 4 இலட்சத்து 7 ஆயிரத்து 129 பாடசாலை பரீட்சார்த்திகளும், 11 ஆயிரத்து 376 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர். இதற்காக நாடு முழுவதும் 3 ஆயிரத்து 844 பரீட்சை நிலையங்களும், 542 இணைப்பு மத்திய நிலையங்களும் செயல்படுகின்றன.

இதேசமயம், கொரோனாத் தொற்றுஉறுதியான பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு விசேட பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.தவிர, 590 விசேட தேவையுடையவர்களும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

இந்தநிலையில், பரீட்சைக்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பரீட்சார்த்திகள் தங்களது பரீட்சைக்குரிய ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சை பணிக்குழாமினர் பரீட்சை மண்டபங்களுக்குச் செல்வதற்காக விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன், அவர்களுக்கு தேவையான எரிபொருளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தவிர, பரீட்சைக்கு தோற்றுவோருக்காகவும், பரீட்சை கடமைகளில் ஈடுபடுவோருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னுரிமை அளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், பரீட்சை நாட்களில் வீதிகளை மறித்து போராட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ்நாட்டின்...

அரச பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

இந்த கையளிப்பு நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பிரதமர் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கப்பல் மூலம் 9,000 மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால் மா மற்றும் 25 மெற்றிக் தொன் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கிடைத்துள்ளன.

நிவாரணம் ஏற்றிய கப்பலை தமிழ் நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கொடி அசைத்து அனுப்பி வைத்தார். இலங்கைக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில், 40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால் மா மற்றும் மருந்துகள் உட்பட 550 கோடி ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்களை நிவாரணமாக வழங்கி உதவ தமிழ்நாட்டு அரசு முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையிலேயே முதல்கட்ட பொருட்களுடனான கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது.

இந்த நிவாரணப் பொருட்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்களில் உள்ள ஆதரவற்ற மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கைக்கு...

இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட் டுள்ளது.

அந்த அறிக்கையில், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்பு தொடர்பான முதலாவது கூட்டம் கடந்த 19 ஆம் திகதி (வியாழக்கிழமை) திறைசேரியின் செயலாளரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது கூட்டிணைந்த செயல் திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து தற்போது பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்குவதை முன்னிறுத்திய கூட்டமாகும்.

அந்தவகையில் இலங்கையின் அத்தியவாசிய சேவைகளின் நிலைபேறானதன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் விளைவாகப் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மூன்று அமைப்புக்களும் பொதுவான கூட்டிணைந்த செயல் திட்டம் ஒன்றை அங்கீகரித்துள்ளன.

தற்போது நடைமுறையிலுள்ள செயல் திட்டங்களுக்கான நிதியை மீள் ஒதுக்கீடு செய்வதன் மூலம் மருந்து, எரிவாயு, உரம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் கிடைப்பனவை உறுதிசெய்தல் மற்றும் நிதியுதவிகளை வழங்கல் என்பனவும் இதில் உள்ளடங்குகின்றன. (ஐ)

## யாழ்ப்பாணத்து...

லில் மூன்றுமுறை தொடந்து ஆட்சியமைத்த லிபரல்ஃநஷனல் கட்சியை தோற்கடித்து தொழிலாளர் கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது.

அவுஸ்திரேலிய மக்கள் தமது 31ஆவது பிரதம மந்திரியாக தொழில்கட்சியை சேர்ந்த அந்தோணி அல்பனீசியை தெரிவு செய்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் மிஷேல் ஆனந்த ராஜா விக்ரோறியா மாநிலத்தில் ஹிக்கின்ஸ் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இவரின் பெற்றோர் யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையை பூர்வீகமாகக் கொண்டவர்களாவர். தென்னாபிரிக்காவில் பிறந்த மிஷேல் இங்கிலாந்து ஊடாக அவுஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்தார்.

இவரின் பூர்வீகம், குடும்ப விபரம் என்பன தேர்தல் முடியும் வரை மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும் பல பத்திரிகைகள் இவரின் பெயரை வைத்து இவர் ஓர் இந்தியர் என்று கூறி வந்தன. இவர் ஒரு மருத்துவராகவும் மருத்துவ ஆராய்ச்சியாளராகவும் கடமை புரிந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையின்...

பால் மக்கள் நெருக்கடியில் சிக்குண்டுள்ளனர். மக்களுக்கு அவசியமான உதவிகளை மிகவும் தெரிவுசெய்யப்பட்ட முறையில் வழங்கவேண்டும் மானியங்களை மக்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும்.

வாழ்க்கை செலவு தொடர்பில் இரண்டு முன்னுரிமைகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர் ஒன்று சமூகத்தின் வறிய மக்கள் - அவர்களே உணவு எரிபொருள் விலை அதிகரிப்பால் தற்போது நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இரண்டாவது முன்னுரிமை, உக்ரைன் யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்கு வழங்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## 2024ஆம்...

இதன்படி அடுத்த வருடம் முழுவதுமாக பொருளாதார மீளெழுச்சிக்கான திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து செயல்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நட்பு நாடுகளின் ஒத்துழைப்புகளை வலுவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் சிலவற்றுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

முதல் விஜயமாக இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## சாகோஸ்...

அவர்களை எவரும் தொடர்புகொள்ள முடியாத நிலை காணப்பட்டது என இலங்கை தமிழ் அகதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் லேய் டே என்ற பிரிட்டனின் சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீவிலிருந்து வெளியே கூடாரம்போன்றவற்றிற்குள் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தாங்கள் சர்வதேச பாதுகாப்பை கோருகின்றனர் என்று அவர்கள் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்கள் புகலிடக்கோரிக்கையை முன்வைப்பதற்கு உதவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பிரிட்டனை சேர்ந்த சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஸ் நிறுவனமான லெய்டே பிரிட்டனின் வெளிவிவகார செயலாளருக்கும் பிஐஓடி ஆணையாளருக்கும் இலங்கை அகதிகள் தொடர்பில் மூன்று கடிதங்களை எழுதியுள்ளதாக தெரிவித்துள்ளது.

தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது அவர்களிற்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சட்டங்களின் கீழ் பிரிட்டனிற்கு உள்ள கடப்பாடுகளிற்கு இது முரணான விடயம் என பிரிட்டனின் சட்ட நிறுவனம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அவர்கள் தொடர்ச்சியாக வெளிஉலகுடன் தொடர்புகொள்ள அனுமதி மறுப்பது - (அவர்களின் குடும்பத்தவர்கள் - சட்ட ஆலோசகர்களுடன்) சட்டவிரோதமானது எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ள இலங்கை அகதிகள் தாங்கள் இறந்தால் தங்கள் உடல்களை பிரிட்டன் என்ன செய்யும் என்று கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன், சிலர் தாங்கள் உயிரிழந்தால் தங்கள் உடல்களை பிரிட்டின் பிரஜைகளுக்கு வழங்க வேண்டும் - என்றும் கூறியுள்ளனர். (ஐ)

## மர்மப்பொருள்...

தோற்றவிருந்தவர் என்று அறிய வருகின்றது.

இந்தச் சம்பவம், கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அண்மையாக நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த சிறுமி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பாதுகாப்பு...

படுகின்றது.

முன்னதாக, பாதுகாப்பு அமைச்சு பதவியை ரமேஷ் பத்திரணவுக்கு வழங்க ஜனாதிபதி முன்வந்தார். ஆனால், அதை ஏற்க அவர் மறுத்துவிட்டார். இந்நிலையில், அவரின் மனதை மாற்றி அவரிடம் அமைச்சு பதவியை வழங்குவதற்காக ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று அரசாங்கத்துக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, 21வது திருத்தமாக 19வது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதி ஒருவர் எந்த அமைச்சு பதவியையும் வகிக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எழுத்தாளர்...

அவர் வயது மூப்புக் காரணமாக நேற்று மாலை வடமராட்சி, பொலிகண்டியிலுள்ள அவரின் வீட்டில் காலமானார்.

ஆசிரியராகக் கடமையாற்றிய அவர், 120இற்கும் மேற்பட்ட சிறுகதைகள் மற்றும் நாவல்கள், குறு நாவல்களை எழுதியுள்ளார். சொத்து, மாத்துவேட்டி, இன்னொரு புதிய கோணம், ஒடுக்கப்பட்டவர்கள் என்பவை அவரின் புகழ் பெற்ற சிறுகதைகள் தொகுப்புகளாகவும் வெளிவந்தன.

1960 -70களில் யாழ்ப்பாணத்தில் உச்சம்பெற்றிருந்த தீண்டாமை ஒழிப்பு செயல்பாடுகளிலும் இவர் முன்னின்று உழைத்திருந்தார்.

எழுத்துத் துறையில் சாஹித்திய மண்டல பரிசு உட்பட பல்வேறு விருதுகளையும் அவர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 2)

## சுகாதார...

இந்த செயலிழப்புக்கான காரணங்கள் என்று தெரிவித்துள்ளன.

இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வாக, கூடுதல் சேவைகளுக்கு விலக்கு இல்லாத கொடுப்பனவு வழங்குதல், வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாள்கள் சிறப்பு விடுமுறை, கடமைக்கு அறிக்கையிடும் அன்று செய்யப்படும் பணியின் அளவை இரட்டிப்பாக்குதல் போன்ற பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படாதுவிடின், கடமைக்கு சமுகமளிக்க முடியாவிடின், எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்மீது பொறுப்பு, ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது விடுமுறையை குறைக்க வேண்டாம் என்று அமைச்சின் செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுக்களை விரைந்து முடிக்க வேண்டும் என எழுத்துபூர்வமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இரட்டை குடியுரிமை கொண்டவர் எம். பியாகும் உரிமை நீக்கப்படும்

## 21ஆவது திருத்தம் இன்று அமைச்சரவைக்கு

கொழும்பு, மே 23

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் இரட்டை குடியுரிமை கொண்ட நபரின் பாராளுமன்ற உறுப்புரிமை நீதிமன்றால் நீக்கப்பட இடம் வழங்கப்பட்டுள்ளது என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

21ஆவது திருத்தச் சட்டம் இன்று திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறிய அவர், மேலும் கூறுகையில்,

நாடு என்றுமில்லாத வகையில் மோசமான நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடியும், அரசியல் நெருக்கடியும் தீவிர மடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு, அத்தியாவசிய சேவைத்துறையில் நிலவும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண முன்னுரிமை வழங்க வேண்டும்.

பாராளுமன்றில் குழு அடிப்படையிலும், கட்சி அடிப்படையிலும் வேறுப்பட்டு குடும்ப ஆட்சியை பாதுகாக்க முயற்சிக்கும் மக்கள் பிரதிநிதிகள் மக்கள் எதிர்க்கொண்டுள்ள பிரச்னைக்கு தீர்வு காண முன்னுரிமை வழங்காததன் விளைவை தற்போது முழு நாடும் எதிர்க்கொள்கிறது.

நிறைவேற்றுத்துறையும், சட்டவாக்கத்துறையும் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்பட வேண்டும். அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் முதல் கட்டமாக அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனநாயக இலட்சணங்கள் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் ஊடாக இல்லாதொழிக்கப்பட்டன. ஆகவே, 21ஆவது திருத்தம் ஊடாக 19 ஆவது திருத்தத்தின் ஜனநாயக இலட்சணங்களை மீள செயல்படுத்துவது அத்தியாவசியமானது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்டவரைவு தயார் செய்யப்பட்டுள்ளது. இன்று இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் திருத்த யோசனை முன்வைக்கப்பட்டு வெகுவிரைவில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

# தமிழ்நாடு முதல்வருக்கு பிரதமர் நன்றி தெரிவிப்பு

கொழும்பு, மே 23

இலங்கைக்கு நிவாரண உதவிகளை அனுப்பிவைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள அந்நாட்டு மக்களுக்கு உதவும் வகையில் தமிழக அரசு சார்பில் அத்தியாவசிய பொருட்கள் மருந்து பொருட்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் கடந்த 18ஆம் திகதி சென்னை துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தமிழகம் சார்பில் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் நேற்று இலங் கையை வந்தடைந்தன. இவற்றை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் நேற்று பொறுப்பேற்றனர்.

இந்நிலையில் பிரதமர் ரணில் தனது ருவிட்டர் பதிவில், 'இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இன்று பால் பவுடர் அரிசி மற்றும் மருந்துகள் உட்பட ரூ. 2 பில்லியன் மதிப்புள்ள மனிதாபிமான உதவிகள் வந்தடைந்தது. தமிழ்நாடு முதல் அமைச் சர் மு. க. ஸ்டாலின் மற்றும் ஆதரவு அளித்த இந்திய மக்களுக்கு எங்கள் மன மார்ந்த நன்றிகள்.' என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# 15 மணித்தியால மின்வெட்டு; அரசியல்வாதிகளின் பொய்!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, மே 23

எதிர்காலத்தில் 15 மணித்தியால மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என அரசியல்வாதிகள் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்து அடிப்படை ஆதாரமற்றது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் யாருடைய ஆலோசனையின்பேரில் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள் எனத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையை முன்னிட்டு நாளை மாலை 06.30 மணி முதல் பரீட்சை நடைபெறும் ஜூன் முதலாம் திகதி வரை மின்வெட்டு இருக்காது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத் நாயக்க இதனை அறிவித்தார்.

இதேவேளை, நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலிருந்து இழந்த 260 மெகாவோட்ஸ் மின்சாரம் இன்று திங்கட்கிழமை முதல் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# எரிவாயு வாகனத்தை முற்றுகையிட்ட மக்கள்!

வவுனியா, மே 23

வவுனியா குட்செட் வீதியில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டு றவு சங்க வளாகத்தில் வைத்து எரிவாயு சிலிண்டர்கள் ஏற்றிய வாகனத்தை மக்கள் முற்றுகையிட் டதால் 30 பேருக்கு வழங்கப்பட விருந்த எரிவாயு சிலிண்டர்கள் 110 பேருக்கு வழங்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பில் தெரி வருவதாவது, வவுனியா மாவட்ட மக்கள் தமக்கு தேவையான எரிவாயுவை மதவாச்சி பூணாவை பகுதிக்கு சென்று அங்குள்ள பிரதான முகவ ரிடம் பெற்று வந்த நிலையில் சில சமயங்களில் கறுப்பு சந்தையிலும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் வவுனியாவில் குடும்ப அட்டைக்கு எரிவாயு வழங் குவதற்கு பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் முடிவடுத்திருந் தனர்.

இதனூடாக அனைத்து மக்க ளுக்கு கிரமமாக மாதமொருமுறை எரிவாயு கிடைப்பதற்கான முறைமையும் குடும்ப அட்டை இல்லாது வவுனியாவில் வசிப்பவர்களுக்கு வேறு திட்டத்தினூடாக எரிவா யுவை வழங்குவதெனவும் இதன் போது தீர்மானித்திருந்தனர்.

இதன் பிரகாரம் இன்றைய தினம் வவுனியாவில் 8 இடங்களில் எரிவாயுவை எரிவாயு முகவர்கள் ஊடாக வழங்குவதெனவும் அங்கு எப்பகுதி மக்களாக இருந்தாலும் குடும்ப அட்டையின் பிரகாரம் சென்று பெற ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

இதன் ஒரு பகுதியாக குட்செட் வீதியில் உள்ள பலநோக்கு கூட்டு றவு சங்கத்தில் வைத்து 30 பேருக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. எனினும், அதற்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முகவரொருவருக்கு அதிகளவான எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப் பட்டமையினால் மக்கள் குழப்பமடைந்தனர். இது கறுப்பு சந்தை வியாபாரத்திற்கு வழிவகுக்கும் என வும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் வரிசையில் நிற்கும் 110 பேருக்கு வழங்கினாலே வாகனத்தை செல்ல அனுமதிப் போம் எனத் தெரிவித்த நிலையில் அந்தப் பகுதிக்கு பொலிஸ் அதிகாரிகள் பிரதேச செயலாளர் நா. கமலதாசன் ஆகியோர் வருகை தந்து மக்களு டன் சமரசம் செய்ய முற்பட்டபோ திலும் அது சாத்தியமாகாத நிலை யில் அங்குள்ள அனைவருக்கு (110) சிலிண்டர்களை வழங்க சம்மதம் தெரிவித்திருந்தனர்.




இதனையடுத்து அங்குள்ளவர்களுக்கு எரிவாயு வழங் கப்பட்டது. இதையடுத்து மக்கள் முரண்படுவதனை கைவிட்டு வரிசையில் நின்று எரிவாயுவை பெற்றனர். (ஐ)

# எரிபொருளை கொண்டுசெல்ல பொலிஸ் பாதுகாப்பு வழங்குக!

## எரிபொருள் தாங்கி வாகன சங்கம்

கொழும்பு, மே 23

எரிபொருள் கொண்டு செல்லும் போது பாதுகாப்பு வழங்குமாறு இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி வாகன உரிமையாளர்கள் சங்கம், பொலிஸ் மா அதிபரிடம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில நாட்களாக குறிப்பிட்ட சில குழுக்கள் செய்த பல்வேறு இடையூறுகளை மேற்கோள் காட்டி இந்த பாதுகாப்பு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் போக்குவரத்தின் போது பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் கடமையை செய்ய முடியாது என்று சங்கத்தின் தலைவர் சாந்த சில்வா பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்தார்.

# சங்கிலிய மன்னனுக்கு நல்லூரில் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 23

இரண்டாம் சங்கிலி மன்னனின் 403ஆவது சிரார்த்த தினம் நேற்று நல்லூரில் நினைவேந்தப்பட்டது.

இலங்கை சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் "இந்துவாக வாழ்வோம் இந்து சமயம் காப்போம்" என்னும் கருப்பொருளில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் சங்கிலியன் சிலையடியில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் சங்கிலியனின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தார்.

இதைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக தொல்லியல் மற்றும் மரபுஉரிமைகள் பீட பீடாதிபதி கலாநிதி புஸ்பரட்ணம் , யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பாலசுந்தரம் பிள்ளை, யாழ். மாநகர பிரதி முதல்வர் துரைராஜா ஈசன், யாழ். மாநகர சபையின்ஆணையாளர் த.ஜெயசீலன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

சங்கிலிய மன்னன் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த இடத்திலிருந்து ஊர்வல பேரணி ஒன்றும் இடம்பெற்றது. இது செம்மணி வீதியூடாக சென்று சங்கிலியன் வீதி பின்வீதியூடாக சென்று யமுனா எரியை சென்றடைந்தது. பின்னர் அங்கும் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தமிழ்தேசிய சைவ மன்னன் என சங்கிலியனை விளித்து பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது




CLICK